கோகுலம்

குழந்தைகள்
மாதமிருமுறை
3-9-72
30 காசு






பசியைப் பெருக்குவதோடு நின்றுவிடும் எந்த டானிக்கும் பாதிவேலையைத்தான் செய்யும்
*
இன்க்ரிமின் பெறுவீர்..
உண்ணும் மிகையான உணவை
ஓங்கிய வளர்ச்சியாக மாற்றும்
*
சேருவீர் இன்க்ரிமின் இனத்தோடு...
வளர்ச்சிக்கான பசியைப் பெறுவீர் வளமுடனே!
பசியைப் பெருக்குவதோடு மட்டுமின்றி, உண்ணும் மிகையான உணவை ஓங்கிய வளர்ச்சியாக மாற்றுகிறது இன்க்ரிமின் டானிக். காரணம், உங்கள் குழந்தை சாப்பிடும் புரத சத்துக்களை மேம்படப் பயன்படுத்திக்கொள்ளும் அதிமுக்கியமான அமினோ அமிலம் அதில் அடங்கியுள்ளது.
பெரிய குழந்தைகளுக்கு இரும்புச்சத்து அடங்கிய இன்க்ரிமின் ஸிரப் — 175 மிலி & 57 மிலி. இளங் குழந்தைகளுக்கு இன்க்ரிமின் டிராப்ஸ் — 10 மிலி.
Incremin syrup
* இன்க்ரிமின்
டானிக்
* அமெரிக்கன் ஸயானமிட் கம்பெனியின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.
Lederle
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கின்றன.
லின்டாஸ்-INC. 21-140 TH

மலர் 1 இதழ் 10

பரிதாபி
ஆவணி 18

செப்டம்பர் 3
1972



உயிர்களிடத்து அன்பு வேண்டும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
— பாரதியார்

அருமைக் குழந்தைகளே,

இந்த இதழ் கோகுலத்தின் அட்டையில் தேதியைப் பார்த்தீர்களா? 3 - 9 - 1972 என்று போடப்பட்டுள்ளது. கோகுலம் ஒவ்வொரு ஆங்கில மாதமும் 1, 15 தேதிகளில்தானே வந்து கொண்டிருந்தது. இனி அதில் ஒரு சிறு மாற்றம். 3ந் தேதி ஞாயிற்றுக் கிழமை இல்லையா? ஆனால் வியாழக்கிழமையான இன்றே (31 - 8 - 72) உங்களுக்குக் கோகுலம் கிடைத்துவிட்டது. இனிமேல் கோகுலம் ஒரு ஞாயிற்றுக்கிழமை விட்டு அடுத்த ஞாயிற்றுக்கிழமையின் தேதியைத் தாங்கியபடி; ஆனால் மூன்று நாட்கள் முன்னதாக ஒரு வியாழக்கிழமை விட்டு அடுத்த வியாழக்கிழமை யன்றே உங்களைத் தேடி ஓடிவரும்.

— ஆசிரியர்

அட்டைப்படச் சிறுமி:

பாக்கிருக்கும்
பழமிருக்கும்
பல்லிருக்காதோ?

வண்ணப் படம்: நரரளிங்கம்

சந்தா விவரம்:

தனிப் பிரதி விலை 30 காசு

ஒரு வருடம்	ரூ.	7-00
ஆறு மாதம்	ரூ.	3-50
இலங்கை	ரூ.	9-00
(இலங்கை நாணயப்படி)		
இதர நாடுகள்	ரூ.	18-00

(சந்தாத் தொகையை மணியார்டர் அல்லது சென்னையில் மாற்றக்கூடிய டிமாண்ட் டிராப்ட் மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தாவைச் செக் மூலம் அனுப்புவதைத் தவிர்க்கவும்.)








நீலவான் தொட்டு நீண்டு வளர்ந்த தென்னைகளில்
வளமான காய்பறித்து நான் வழங்கிக்கும் தனிச்சுவை!
நியூட்ரின்
கோகோனட்
பான்-பான்
nutrine
குழந்தைகளே ! பஞ்சொத்த
தேங்காய்த் துருவல்,
பலமூட்டும் ஆடைப்பால்
இவற்றின் பாங்கான சுவைப் புதையல்-
நியூட்ரின் கோகோனட் பான் பான்கள் !
தின்னத்தின்ன
திகட்டாத மிட்டாய் !
nutrine
நியூட்ரின் கன்பெக்ஷனரி கம்பெனி
பிரைவேட் லிமிடெட், சித்தூர் (ஆ.பி.)

ஆத்திசூடி

ராஜாஜி







கைவினை கரவேல்

கைவினை—கைத்தொழில் திறமையை.
கரவேல் — மூடி வைக்காதே. அதாவது உபயோகப்படுத்தாமல் அழிந்து போக விடாதே.

வாழ்வு நடத்த வழிகள் வேறு பல கொண்டிருந்தாலும் தெரிந்த கைத் தொழில்களைச் செய்து கொண்டே யிருக்க வேண்டும். கல்வி கற்றுப் பெரும் பதவி அடைந்து சுகமாக ஜீவனம் செய்பவர்களுக்கு இது முக்கியமான விஷயம். கைத்தொழில் திறமை பழக் கம் தவறினால் கெட்டுப் போகும்.

கொள்ளை விரும்பேல்

பிறர் பொருளைப் பலாத்காரமாக அபகரிக்க எண் ணாதே. பிறர் பூமி, அல்லது செல்வத்தைப் பிடுங்கிக் கொள்ள வசதி யிருந்தாலும் அப்படிச் செய்வது பெருங் குற்றமாகும். பலமுள்ளவன் பலமில்லாதவர்களைக் காப்பாற்ற வேண்டும். மிருகங்களுக்கும் மனிதனுக்கும் இதுவே வித்தியாசம்.




கோதாட்டொழி

கோது — குற்றம் கலந்த
ஆட்டு — விளையாட்டுக்களை
ஒழி — நீக்கிவிடு.

மகிழ்ச்சி தரும் பல விளையாட்டுக் களில் குற்றம் கலந்தவைகளை நீக்கிக் குற்றமில்லாத ஆட்டங்களை ஆடத் தக்கவை. பிற பிள்ளைகளை இம்சை செய்தோ அல்லது பிறர் மனம் வருந்தச் செய்தோ நாம் களித்தல் கூடாது. அது நல்ல விளையாட்டாகாது. நமக்கு ஏதும் தீங்கு செய்யாத பறவைகளைப் பிடிப்ப தும் மிருகங்களை வதைப்பதும் நல்ல விளையாட்டாகாது. மனிதரைப் பரி கசித்து மகிழ்ச்சியடைவதும் கோதாட் டம் ஆகும்.





கண்ணன் கனியமுதம்

திருமுருக கிருபானந்த வாரியார்

இராமனும் கிருஷ்ணனும் துள்ளிக் குதித்து மாட்டுத் தொழுவத்தில் ஓடி, கன்றுகளின் வாலைப் பிடித்து இழுத்து அக்கன்றுகளுடன் ஓடி விளையாடினார்கள். மான்களைப் பிடித்து அவைகளின் கொம்புகளை ஒடித்து மகிழ்ந்தார்கள். கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பில் கை வைத்தும், பூனைகளின் வாயில் விரல்களை விட்டும் சாணிகளில் புரண்டும் பலப் பல துடுக்குகள் செய்தார்கள்.

இடைக் குலச் சிறுவர்களை அழைத்துக் கொண்டு கோபிகைகளின் வீடுதோறும் நுழைந்து, பால், தயிர் வெண்ணெய்களை அவர்கள் அறியாமல் உண்டும், குரங்குகளுக்கும், பூனைகளுக்கும் கொடுத்தும், கைகளைக் கொட்டிச் சிரித்துக் கொண்டும் ஓடி விளையாடுவார்கள். இவ்வாறு கிருஷ்ணர் செய்யும் பலப்பல லீலைகளைக் கண்டு, அத்துன்பத்தைப் பொறுக்க மாட்டாத கோபிகைகள் ஒன்று கூடி வந்து யசோதையிடம் முறையிடலானார்கள்.

''அம்மா! யசோதா! உன் மகன் கிருஷ்ணன் செய்யும் சேட்டைகள் கொஞ்சம் அல்ல. நாங்கள் வீட்டு வேலைகள் செய்யும்போது மெல்ல வந்து கன்றுகளை அவிழ்த்து விட்டு மூலைக்கு ஒன்றாக விரட்டித் துரத்துகிறான். பசுக்களின் மடியில் வாய் வைத்துப் பாலைப் பருகுகிறான். எங்கள் வீட்டில் நுழைந்து பால் தயிர், வெண்ணெய் அத்தனையும் தின்றுவிட்டு ஓடுகின்றான். இவனுடைய துன்பத்தைத் தாங்க மாட்டாமல் பண்டங்களை உறிகளில் வைத்தோம். ஒன்றுக்கு மேல் ஒன்றாக அடுக்கி வைத்துள்ள ஏனங்களை எடுத்துத் தான் தின்ற மிகுதியைக் குரங்குகளுக்குக் கொடுக்கின்றான். ஓடிவந்து எங்களைப் பார்த்து, 'அதோ பார்! குரங்குகள் தயிர் பால் ஏனங்களை எடுத்துக் கொண்டு போகின்றன' என்கின்றான்.

''சில சமயங்களில் எங்கள் வீட்டில் ஒன்றும் இல்லையானால் 'இந்தப் பாழும் வீட்டில் பாலும் தயிரும் இல்லையே?' என்று இகழ்ந்து கூறி எங்கள் பிள்ளைகளை அடித்து அழவைக்கிறான்.

''உரலின் மீது ஏறி, உறியில் உள்ள பானைகளைக் குச்சியினால் ஓட்டை செய்து ஒழுகுகின்ற பால் தயிர்களைக் கையேந்திக் குடித்துவிட்டு ஓடுகின்றான். எங்கள் வீடுகளில் இருள் நிறைந்த அறைகளிலும் நுழைந்து துழாவுகின்றான். இவன் பாதம் படாத இடமே எங்கள் வீடுகளில் இல்லை.

''அம்மா! இவன் இருட்டு அறைக்குள் நுழைந்தால் இவன் உடல் ஒளியால் இருள் நீங்கி விளக்கம் பெறுகின்றது. மின்னல் போல் மறைகின்றான். எங்கே ஒளிய வைத்தாலும் இவன் எப்படியோ அந்த இடத்தைத் தெரிந்து கொண்டு வெண்ணெயைத் தின்றுவிட்டு, எங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரிக்கின்றான்.

'' 'யார்டா திருடா!' என்று நாங்கள் வைதால், 'யாரடி திருடி!' என்று அழைத்து இவன் வாயில் இருக்கின்ற வெண்ணெயை எங்கள் வாயில் தடவி விடுகின்றான். இவன் செய்யும் மாய வித்தைகளுக்கு அளவே யில்லை'' என்று சொன்னார்கள்.

அப்போது கிருஷ்ணர் ஒன்றும் அறியாதவர் போல் தாய்க்குப் பின்புறம் நின்று, ஒன்று, இரண்டு, மூன்று நான்கு ஐந்து என்று விரல் விட்டு எண்களைப் பயில்வார் போல் நடித்துக் கொண்டிருந்தார்.

யசோதை கோபியர்களின் முறையீட்டைக் கேட்டுக் கோபம் கொண்டாள். கண்ணனுடைய காதைப் பிடித்து இழுத்து, ''அடே! சண்டிப் பயலே! களவைக் கனவிலும் கருதலாமா? நம்ம வீட்டில் என்ன குறை? இங்கு எல்லாம் குறைவற நிறைந்திருக்கின்றனவே? இவைகளை உண்ணாமல், நமது பெருமையையும் எண்ணாமல், இவர்கள் வீடுகளில் புகுந்து இப்படித் திருடலாமா? இது உனக்கு வெட்கமாக இல்லையா?'' என்று கூறி அதட்டினாள்.

கிருஷ்ணர் பேசினார்: ''அம்மா! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். சிந்திக்காமல் பேசக் கூடாது. கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்பதும் பொய். ஆய்ந்து ஓய்ந்து பார்க்கவேணும் என்பார்கள்.

''இங்கே பட்டாளம் போல் திரண்டு வந்திருக்கின்ற பெண்களைப் பார். பதினாயிரம் பேருக்கு மேல் இருப்பார்கள்.


வீட்டுக்குக் கால் படி என்று குறைந்த பட்சமாக வைத்தாலும் நாலாயிரம் படி பால் ஆயிற்று. என் ஒரு சாண் வயிற்றில் நாலாயிரம் படி பால் கொள்ளுமா? என் வயிறு ஏரியா? குளமா? இத்தனை பெண்களும் கணவனுக்குத் தெரியாமல் தங்கள் பொருள்களைத் தாங்களே தின்றுவிட்டு, என்மீது பழி சுமத்துகிறார்கள். அம்மா! நான் சின்னக் குழந்தை தானே? நான் என்ன ராக்ஷஸனா? வண்டி வண்டியாக உண்ண முடியுமா? இவர்கள் பேசுவது வடிகட்டிய பொய், நம்பாதே!''

மகன் கூறும் இனிமழலைச் செஞ்சொல் கேட்டு யசோதை உள்ளம் உருகினாள். கண்கள் ஆனந்தக் கண்ணீர் சிந்தின.

''என் கண்ணே! கருமணியே! திருமணியே!'' என்று கொஞ்சிக் கண்ணபிரானுடைய கன்னத்தைக் கிள்ளி முத்தம் இட்டாள்.

ஒரு கோபிகை, ''திருட்டுக் கிருஷ்ணா! நீ என் வீட்டில் வந்து பாலும் வெண்ணெயும் 'லபக்' 'லபக்' என்று தின்றாயே? இல்லையென்று இங்கே பல்லைக் காட்டி எங்களைப் பரிகசித்துப் பொய்யும் புளுகும் அளக்கின்றாயே!'' என்றாள்.

(தொடரும்)



யுதாவும் ஏழு சகோதரர்களும்

வாண்டு மாமா

யுதா பிறந்தபோது அவளுக்கு ஏழு அண்ணன்மார்கள் இருந்தார்கள். எட்டாவதாக யுதா ஒரு பெண்ணாகப் பிறந்தாள். தங்களுக்குத் தம்பியா, தங்கையா என்பதை அறிய அறை வாசலில் காத்திருந்த ஏழு சகோதரர்களிடமும் அவர்கள் அத்தை வந்து சொன்னாள்— பிறந்திருப்பது ஓர் ஆண் குழந்தை என்று. தம்பிகளையே அடுத்தடுத்துக் கண்ட அவர்களுக்கு இது ஒரே ஏமாற்றமாகப் போய்விட்டது. அத்தை அப்படி ஒரு பொய்யைச் சொல்லாமல் இருந்தால் அவர்கள் அங்கேயே இருந்திருப்பார்களோ என்னவோ? மறுபடியும் தம்பி என்றதும் ஏழு பேரும் கிளம்பிவிட்டார்கள், தங்கள் அதிருஷ்டத்தைத் தேடிக் கொண்டு; இனி வீட்டுக்குத் திரும்பி வருவதில்லை என்ற முடிவோடு.

யுதா வளர்ந்தாள், பெரியவளானாள். தான் மட்டும்தான் தன் தாய்க்குக் குழந்தை என்ற எண்ணத்தில் வளர்ந்து பெரியவளான அவளுக்கு ஒருநாள் உண்மை தெரிந்தது, தனக்கு ஏழு அண்ணன்மார்கள் இருக்கிறார்கள் என்று. தன் தாயாரிடம் துளைத்துத் துளைத்துக் கேள்விகளைப் போட்டு இதைத் தெரிந்து கொண்டாள். அதன் பிறகு அவளால் தன் அண்ணன்மார்களைக் காண வேண்டும் என்கிற ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நல்லதோர் ஒட்டகத்தை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் யுதா, அண்ணன்மார்களைத் தேடிக் கொண்டு. ''அவர்களைக் காணாமல் நான் திரும்ப மாட்டேன்'' என்று தாயாரிடம் கூறிவிட்டுப் போனாள்.

ஒட்டகத்தின் மீது பல நாட்கள் பாலைவனத்திலே பிரயாணம் செய்தாள். ஒயஸிஸ் உள்ள இடங்களிலெல்லாம் ஏழு இளைஞர்களைப் பற்றி விசாரித்துக் கொண்டு போனாள். கடைசியாக அவளுடைய சகோதரர்கள் திரிபோலியில் ஒரு கோட்டையில் இருப்பதாகத் தகவல் கிடைத்ததும் அங்கு விரைந்தாள். திரிபோலியிலுள்ள கோட்டையிலிருந்த ஏழு வாலிபர்களும் யுதாவையும் அவள் கூறியதையும் நம்பத் தயாராக இல்லை. ஏனென்றால் அவர்கள் அத்தை அவர்களுக்குப் பிறந்திருப்பது தம்பி என்றல்லவா கூறியிருந்தாள்? ஆனால் யுதா மனம் தளரவில்லை. ஒவ்வொரு அண்ணனின் ரகசிய அடையாளங்களையும், அவளது தாயார் சொல்லியிருந்தபடி கூறி அவர்களை நம்ப வைத்ததும் ஏழு அண்ணன்மார்களுக்கும் மகிழ்ச்சியான



கிழ்ச்சி. தங்களுக்குக் கடைசியாக
ரு தங்கை — அதுவும் இவ்வளவு அழகி
யாக, தைரியசாலியாக வாய்த்திருப்
தை எண்ணியும் எல்லோரும் ஒன்று
சேர்ந்ததற்காகவும் அந்த நாளைக் குதூ
லமாகக் கொண்டாடி மகிழ்ந்தார்கள்.
ன்று நாட்கள் இப்படிக் கோட்டை
கோலாகலமாகக் காட்சி யளித்தது.
ான்காவது நாள் ஏழு சகோதரர்களும்
கோதரி யுதாவிடம் வந்து, ''தங்கச்சி!
ாங்கள் வேட்டைக்கு வெளியே போகி
றோம். திரும்பி வர ஏழு நாட்களாகும்.
இந்தக் கோட்டையில் தனியாக
இருக்க வேண்டும். உனக்குத் துணையாக
இதோ இந்தப் பூனை இருக்கும்.
கோட்டையின் ஏழு கதவுகளையும் பூட்
டிக்கொள். இந்தப் பூனையைக் கேட்கா
மல் எதையும் செய்யாதே. தன் வாழ்
நாளெல்லாம் இந்தப் பூனை இங்கேயே
இருந்திருக்கிறது. ஆகவே எதிரிகளின்
எல்லாச் சூழ்ச்சிகளும் இதற்குத் தெரி
யும். எதைச் சாப்பிட்டாலும் இதற்குக்
கொடுக்காமல் சாப்பிடாதே. கோட்
டையின் உச்சியில் உள்ள மண்டபத்தில்
புறாக்கள் இருக்கின்றன. மறக்காமல்
அவைகளுக்கும் உணவு கொடு. ஏதா
வது எங்களுக்கு அவசரத் தகவல்
அனுப்ப வேண்டுமானால் அந்தப் புறாக்
களின் உதவி உனக்குத் தேவைப்படும்''
என்று எல்லா விவரங்களும் அவளுக்குக்
கூறிவிட்டு ஏழுபேரும் வேட்டைக்குக்
கிளம்பினார்கள்.

தன் அண்ணன்மார்கள் ஏழு பேரும்
குதிரை ஏறிப் போவதைப் பார்த்துக்
கொண்டிருந்த யுதா அவர்கள் கண்
ணுக்கு மறைந்ததும் கோட்டைக்
கதவுகள் ஏழையும் மூடிப் பூட்டினாள்.
அதன் பிறகு கோட்டையின் உள்ளே
துப்புரவாக்குவதில் முனைந்தாள். அறை
அறையாகச் சுத்தம் செய்து கொண்டு
வரும்போது ஓரிடத்தில் ஒரு நிலக்கடலை
கிடந்தது. எவ்வித யோசனையுமில்லா
மல் அதை எடுத்துத் தன் வாயில் போட்
டுக் கொண்டாள்.

அவள் போகு மிடமெல்லாம் அவள்
கூடவே வந்து கொண்டிருந்த பூனை
''என்ன சாப்பிடுகிறாய் நீ?'' என்று
கேட்டது.

''ஏதோ ஒரு நிலக்கடலைப் பருப்பு''
என்றாள் யுதா.

''அதில் பாதியை என்னிடம் கொடு''
என்றது பூனை.

''அதெப்படி முடியும்? நான் அதைத்
தின்றுவிட்டேனே. உனக்கு வேண்டு
மானால் உக்கிராண உள்ளில் நிறையக்
கடலை இருக்கிறது. எடுத்துக்கொள்''
என்று அலட்சியமாகக் கூறினாள் யுதா
பூனையிடம்.

''உக்கிராண உள்ளைப் பற்றியும் அதி
லுள்ளதைப் பற்றியும் எனக்குத் தெரி
யும். ஆனால் எனக்கு வேண்டியது நீ
சாப்பிடுவதில் சரி பாதியைத்தான்''
என்றது பூனை.

''போ, போ'' என்று எரிச்சலுடன்
சீறினாள் யுதா. ''நான் சாப்பிடுவதில்
உனக்குப் பங்கு தர முடியாது போ.
என் காரியங்களில் இப்படி இனிக் குறுக்



கிடாதே. உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள்'' என்று விரட்டினாள் பூனையை. பூனை நேரே அடுக்களைக்குள் போயிற்று. அங்கு எரிந்து கொண்டிருந்த அடுப்பை அணைத்தது.

வீட்டைச் சுத்தம் செய்து விட்டுப் பசியோடு வந்தாள் யுதா. உணவு தயாரித்துச் சாப்பிட அடுப்பண்டை போனபோது அது அணைந்திருப்பதைக் கண்டதும் அவளுக்கு அழுகையும் அதே சமயம் ஆவேசமான கோபமும் வந்தன. அது பூனையின் வேலைத்தனம் தான் என்பது அவளுக்குத் தெரிந்து விட்டது. ''ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று கேட்டாள் பூனையிடம்.

''நீதான் உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள் என்றாயே. நானில்லாமல் உன்னால் இங்கு எதுவும் செய்ய முடியாதென்பதை இனியாவது உணர்ந்து கொள்வாய்'' என்றது பூனை.

''ஓஹோ! அப்படியா? அதையும் பார்த்துவிடலாம்'' என்று கறுவினாள் யுதா. ஆனால் என்ன செய்தும் அவளுக்கு அடுப்பைப் பற்ற வைக்கும் வழி புலப்படவில்லை. தீ உண்டாக்கும் சாதனம் எதுவும் அங்கு இல்லை. வர வர இருட்டிக் கொண்டு வந்தது. கோட்டைச் சாளரத்தின் வழியே வெளியே பார்த்தாள். தொலைவில் ஏதோ ஒன்று ஒளிவிட்டு எரிவது போலிருந்தது. அவளுக்கோ பசி. ஆகவே தூரத்தே தெரியும் நெருப்பிலிருந்து ஒரு கங்கு கொண்டு வந்து அடுப்பை மூட்டி ஆகாரம் தயாரிப்பதென்ற முடிவோடு கோட்டையின் ஏழு கதவுகளையும் திறந்து கொண்டு வெளியே வந்தாள். யாரோ கணப்பு அருகே உட்கார்ந்து குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அவள் நினைத்தாள். ஆனால் அருகே போனதும்தான் உண்மை தெரிந்தது. அப்படியே உடல் நடுங்க வெல வெலத்துப் போய் விட்டாள் யுதா. அங்கே இருந்தது ஒரு கருஞ் சிறுத்தைப் புலி. அதன் கண்கள்தான் அப்படி நெருப்புத் துண்டங்களாக ஜொலித்திருக்கின்றன.

யுதாவைக் கண்டதும் சிறுத்தை அவள் மீது பாய்ந்தது. நல்லவேளை! தைரியசாலியும் சமயோசித அறிவும் கொண்ட யுதா வெகு வேகமாக ஓடினாள். கோட்டைக்குள் புகுந்து ஏழு கதவுகளையும் அடைத்துக்கொண்டாள். ஓடிவந்த வேகத்திலும் சிறுத்தையைக் கண்ட அதிர்ச்சியிலும் அவள் உடல் வியர்வையால் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது.

கருஞ்சிறுத்தை ரொம்பப் பொல்லாதது. ஒவ்வொரு கோட்டைக் கதவாக அடித்து நொறுக்கி உடைக்கலாயிற்று. யுதா கோட்டையின் உச்சிக்கு ஓடினாள். புறாக்களிடம் தனக்கு நேர்ந்துள்ள அபாயத்தைக் கூறி உடனே தன் அண்ணன்மார்களைக் கூட்டி வரும்படி அவைகளை அனுப்பினாள்.

கருஞ் சிறுத்தை ஆறு கதவுகளையும் உடைத்து விட்டது. அவை மரக் கதவுகள். ஏழாவது கதவு இரும்புக் கதவு. அதற்குள் பொழுது விடிந்து விடவே, ''நாளை இரவு மறுபடியும் வருகிறேன். வரும்போது கையோடு நெருப்பைக் கொண்டு வந்து இந்தக் கதவை உருக வைத்து உள்ளே நுழைகிறேன், பார்!'' என்று சொல்லி முற்றுகையை விட்டுப் போயிற்று சிறுத்தை.

இதற்குள் புறாக்களின் மூலம் தகவல் அறிந்த ஏழு சகோதரர்களும் கோட்டைக்கு விரைந்து வந்து சேர்ந்தார்கள். சிறுத்தையின் சபதத்தைக் கேட்டு, ஏழாவது கோட்டைக் கதவின் உட்பக்கமாகப் பெரிய குழி தோண்டி அதில் கொதிக்கும் தாரை நிரப்பி, அது தெரியாமல் போலியாக அதை மூடி வைத்தார்கள். சொன்னபடியே கருஞ் சிறுத்தை மறுநாள் இருட்டியதும் நெருப்போடு வந்தது. இரும்புக் கதவை உருக்கி உள்ளே நுழைந்ததும் சகோதரர்கள் வெட்டியிருந்த தார்க் குழியில் விழுந்து கருகிச் சாம்பலாயிற்று. அப்போது சிறுத்தையின் கால் நகங்களில் ஒன்று வெடித்துச் சிதறி அங்கே நின்று கொண்டிருந்த யுதாவின் உடலில் பாய்ந்தது. அடுத்த கணம் யுதா சுருண்டு விழுந்து இறந்து போனாள்.

அருமைத் தங்கைக்கு நேர்ந்த அலங்கோல முடிவைக் கண்ட ஏழு சகோதரர்களும் அழுது புலம்பினார்கள். அவர்கள் நிலை பார்க்கப் பரிதாபமாக இருந்தது. பாவம்! தங்கள் தங்கையின் உடலை அப்படியே பூப்போல எடுத்து அவள் ஏறி வந்த ஒட்டகத்தின்மீது கிடத்தினார்கள். ஒட்டகத்திடம் ''எங்கள் தங்கையைச் சுமந்து கொண்டு விரைவில் எங்கள் தாயாரிடம் சேர்ப்பித்துவிடு. வழியில் யாரிடமும் அகப்பட்டுக்கொள்ளாதே. இளைப்பாற எங்கும் வழியில் தங்கிவிடாதே. 'கயிறு' என்று யாராவது சொன்னால் மட்டும் உன் ஓட்டத்தை நிறுத்து'' என்று ஆணையிட்டு அதை அனுப்பினார்கள்.

ஒட்டகம் யுதாவைச் சுமந்துகொண்டு ஓடலாயிற்று. வழியில் மூன்று பேர் அதைத் துரத்தி வந்தார்கள். ''நில், நில்'' என்று கூவினார்கள். ஒட்டகம் அவர்களை லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து ஓடி வந்த அவர்களில் இளை

(தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க)

பிள்ளையாரும் படிக்காத பிள்ளையும்

பையன் :

அரச மரத்துப் பிள்ளையாரே!
ஆனை முகத்துப் பிள்ளையாரே!
முறம்போல் செவியை உடையவரே!
முறையி டுகின்றேன் விடைபகர்வீர்!
தொழுதேன் உம்மைப் பிள்ளையாரே!
தேர்வில் தேர்ச்சி பெறவில்லை!
அழுகை வருது பிள்ளையாரே!
ஆனது ஏனோ இதுபோலே?
தேர்வு எழுதச் செல்லுங்கால்
தோப்புக் கரணம் ஒருநூறு
ஆர்வ முடனே அனுதினமும்
ஐயா போட்டேன் அறிவீரே!
அம்மா கொடுத்த கொழுக்கட்டை
அனைத்தும் உமக்கே படைத்தேனே
இம்மா திரிஏன் செய்திட்டீர்?
ஏமாற் றிவிட்டீர் ஐங்கரரே!

பிள்ளையார் :

சரியாய்ப் பாடம் படிக்காமல்
தோப்புக் கரணம் போட்டுவரும்
சிறுவர் எவரும் என்னுடைய
சிறிய கண்ணில் படுவதில்லை!
ஒழுங்காய்ப் பாடம் படிக்காமல்
கொழுக்கட் டைகளைப் படைத்திட்டுத்
தொழுகை செய்தால் அப்பண்டம்
சிறிதும் எனக்கு இனிப்பதில்லை!
அருமைச் சிறுவா! அயராது
அல்லும் பகலும் படித்திடுவாய்
தருவேன் வெற்றி நிச்சயமாய்....
தொழுகை செய்வாய் படித்தபின்னே..

பையன் :


அறிந்து கொண்டேன் பிள்ளையாரே!
குறித்துக் கொண்டேன் அறிவுரையை...
புரிந்து கொண்டு ஒழுங்குறவே
பாடம் அனைத்தும் பயின்றிடுவேன்
நம்பி உன்னைக் கற்றிடுவேன்
நானும் வெற்றி பெற்றிடுவேன்!
தும்பிக் கையா தூமணியே!
தொழுதேன் துங்கக் கரிமுகனே!

"கரி"





பிள்ளையார் பேசுகிறார்



-நஜன்-

கோகுலம் குழந்தைகளுக்கு என் ஆசிகள்.

எல்லோரும் தன்னைப் பற்றிச் சொல்லிக்கொள்ளும் இக்காலத்தில் நானும் கொஞ்சம் என்னைப் பற்றிச் சொல்லிக் கொண்டால் என்ன?

☐ குளக்கரை, ஆற்றங்கரை அரச மரத்தடி, தெரு மூலை எங்கும் நான் உட்கார்ந்திருப்பது ஏன் தெரியுமா?

எனக்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. என் அம்மாவைப்போல அழகுள்ள ஒரு பெண்ணைத் தேடி மனைவியாக அடையக் குளக்கரை, ஆற்றங்கரை முதலிய இடங்களையெல்லாம் தேர்ந்தெடுத்தேன். ஆனால் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் அவளைத் தாயாகவே என் மனம் நினைக்கிறது. அதனால்தான் இதுவரையில் மணமாகாமல் பிரம்மசாரியாக இருந்து வருகிறேன்.

☐ எனக்கு என் அப்பா மாம்பழம் பரிசு கொடுத்தது உங்களுக்குத் தெரியும். அதன் தத்துவம் உங்களுக்குத் தெரியுமோ?

என் தம்பி முருகன் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் அப்பா–அம்மாவை – அதாவது முன்னறி தெய்வத்தைப் பார்த்தான். நான் அப்பா அம்மாவினிடமே உலகைக் கண்டேன். அவ்வளவுதான்.

☐ எனக்கு இந்திய சுதந்திரப் போரில் ஒரு பங்கு உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமோ?

லோகமான்ய பால கங்காதர திலகர் என் பிறந்த விழாவை மிகப் பிரபலமாக நடத்தி மக்களிடையே தேசிய உணர்ச்சியை ஊக்குவிக்க உபயோகப்படுத்தினார். மகாராஷ்டிர மாநிலத்தினர் இன்னமும் என்னை விசேஷமாகக் கொண்டாடுகின்றனர். எனது உருவைக் கண்ணுக்கினிய முறையில் பெரிய அளவில் செய்து ஊரெங்கும் கூடி மகத்தான விழா எடுக்கின்றனர்.

☐ தமிழ்நாட்டில் எனக்கு எத்தனையோ கோயில்கள் இருந்தாலும் என் பெயரிலேயே உள்ள ஊர் ஒன்றுதான் உள்ளது. சில கோயில்களில் என்னுடைய மிகப் பெரிய உருவத்தைக் காணலாம்.

செட்டிநாட்டிலுள்ள பிள்ளையார் பட்டியில் எனக்கு ராஜகோபுரத்துடன் கூடிய மிகப் பெரிய ஆலயம் இருக்கிறது. திருச்செந்தூர், மதுரை, 'திருவானைக்கா'வில் சிதம்பரத்தில்,, திருவண்ணாமலையில் என்னை 'ஒரிஜினல் சைஸி'ல் காணலாம்.

☐ என்னைப் பற்றிய தமிழ் நூல்கள் எவை என்பது தெரியுமா?

ஔவைப் பாட்டியும், நக்கீரரும் என்மீது அகவல்கள் பாடியுள்ளனர்,



முத்கல புராணம், கபிலர் இயற்றிய மூத்த பிள்ளையார் இரட்டை மணி மாலை, விநாயக புராணம், கந்தர் கணபதி தேவாரத் திரட்டு, கணபதி உபநிஷத் முதலியன.

என்னை ஓங்கார வடிவினன் என்பார்கள். தமிழ் எழுத்து 'ஓ' என் உருவை ஒத்திருக்கிறது என்பது தான் உங்களுக்குத் தெரியுமே!

□ எனக்குக் கொழுக்கட்டை பிடிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். அதற்குக் காரணம் தெரியுமோ?

மாவினால் ஆன வெள்ளைப் பண்டம் உடல். தித்திக்கும் பூரணம்- ஆத்மா. வெள்ளை உள்ளத்துடன் அன்புள்ளவர்களாக நீங்கள் விளங்க வேண்டும் என்பதை உணர்த்தவே தான் இது. இந்தக் கொழுக்கட்டை அல்லது மோதகம் செய்கிற முறை தமிழ் நாட்டாருக்கன்றி வேறு யாருக்கும் தெரியாது.



நாகப்பட்டினம் - பஞ்சமுக விநாயகர்

□ உங்களைப் போல் குழந்தைக் கணபதியாக என்னைப் பார்க்க விரும்புகிறீர்களா?

வேலூர்க் கோட்டைக்குள் உள்ள கல்யாண மண்டபத்துக்கு வாருங்கள். அங்கு கண்ணன் போலத் தவழ்ந்து வெண்ணெய் உண்ணும் என்னைக் காணலாம்.

□ ஏன் 'கல்கி' ஸ்தாபனத்தினர் என்னை அவர்கள் காப்புத் தெய்வமாகக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா?

வியாசர் சொல்ல நான் மகாபாரதத்தை எழுதினேனும். ஆகவே என்னை எழுத்தாளரின் தெய்வம் என்கிறார்கள் பேராசிரியர் 'கல்கி' அவர்கள். அதன் பொருட்டே அவர் ஆரம்பித்த பத்திரிகையின் காப்புத் தெய்வமாக என்னைக் கொண்டிருக்கிறார்கள்.



□ உங்களுக்கு நான் என்ன சொல்ல விரும்புகிறேன், தெரியுமா?

படிக்கிற நேரத்தில் படியுங்கள். விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடுங்கள். எக்காரியத்தையும் செய்யும் முன் என்னை நினையுங்கள். கோகுலத்தைத் தவறாமல் படியுங்கள்.







பார், பார், போட்டோ பார்!

"கையிலும் வரமாட்டேங்குது.... கயத்திலும் சிக்க மாட்டேங்குது."

ஆர். ஜெயராமன்

"நான் சரியாப் படம் போட்டிருக்கேன், பாரு....!"

எம். நடராஜன்

"டெலிபோன் பண்ணேன்னு சொன்னான். எத்தனை நேரமாக் காத்திருப்பது?"

"இப்படி சிரிச்சுக்கிட்டு நின்னா எனக்கு வெட்கமாயிருக்கு!"

என். சுந்தரராஜன்







என்ன
விநோதம்
பாரு !

பாசாங்குக்கார ஒப்போசம்





ஏதாவது ஒரு பிராணி தாக்கப்படும்போது அது என்ன செய்யும்? உயிர் தப்ப ஓடும், அல்லது உயிர் வாழ எதிர்த்துப் போராடும். ஆனால் ஒரு பிராணி ஆபத்து வரும்போது ஓடுவதில்லை. தன் உளிப் பற்களைக் காட்டிச் சீறிப் பாய்வதுமில்லை. பின் என்னதான் செய்கிறது உயிர் தப்ப? பந்து போலச் சுருண்டு உருண்டு கிடக்கும். அரைக் கண் மூடியபடி, திறந்த வாயில் நாக்கு துவண்டு வெளியே துருத்திக் கொண்டிருக்க, இறந்ததைப் போலக் கிடக்கும். இந்தச் சமயத்தில் அநேகமாக இது மூச்சு விடுவதைக்கூட நிறுத்திக்கொள்ளும். தான் இறந்து கிடப்பதாக எதிரி நினைக்க வேண்டும் என்பதற்காகவே ஓபோஸம் இப்படிச் செத்துக் கிடப்பது போல் பாசாங்கு செய்கிறது. இதன் தந்திரத்தில் ஒரு தடவை ஏமாந்த பிராணி மறு தடவை ஏமாறுமா? என்ற சந்தேகம் ஏற்படுகிறதல்லவா? ஆனால் இறந்து கிடப்பது போன்ற இந்த நடிப்பை இது அத்தனை கச்சிதமாகச் செய்வதால் ஒவ்வொரு தடவையும் இதற்குத் தான் வெற்றி. பாசாங்கு செய்பவர்களைக் குறிக்க, ''ஓபோஸத்தைப் போல'' என்ற வழக்குச் சொல்லே அமெரிக்கரிடையே ஏற்பட்டு விட்டதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அமெரிக்காவிலுள்ள ஒரே ஒரு மார்ஸூபியல் மிருகம் இதுதான். 'மார்ஸூபியல்' என்றால் என்ன? தங்கள் குட்டிகளைச் சுமக்க வயிற்றில் பையுடைய பிராணிகளுக்கு 'மார்ஸூபியல்' என்று பெயர். அமெரிக்காவில் வாழும் ஓபோஸத்தில் பிரசித்தமானது வர்ஜீனியா ஓபோஸம். வீட்டுப் பூனை அளவு இருக்கும் இவை. இருபது அங்குல நீள உடலும், ஓர் அடி நீளமுள்ள வாலும் இதற்கு உண்டு. இந்த வால் மரத்துக்கு மரம் தாவி ஏறப் பயன்படும். தன் வாலையே கயிறு போல் பற்றிக்கொண்டு ஏறும் திறமை இதற்கு உண்டு. உடலின் ரோமம் சொர சொரப்பாக இருக்கும். பன்றியினுடையதைப் போன்ற நீண்ட மூக்கும் விரிந்த காதுகளும் கொண்டது ஓபோஸம். கால் விரல்கள் நீளமானவை. இதனால் அடிச்சுவடுகள் ஈரத் தரையிலும் புழுதித் தடத்திலும் தீர்க்கமாகத் தெரியும்.

நீக்ரோக்கள் நாயைக் கொண்டு இதை வேட்டையாடுவதில்லை. உயிரோடு பிடித்துக் கொழுக்க வைத்துப் பிறகு உணவுக்குப் பயன் படுத்திக் கொள்ளுவார்கள். ரொம்பப் பயந்த சுபாவமுள்ள இம் மிருகம் தன் விரோதியான நீக்ரோக்களைத் தவிர, ஆந்தை, நரி, ஓநாய், காட்டுப் பூனை இவைகளிடமிருந்தும் தப்பிப் பிழைத்து, எப்படி உயிர் வாழ்ந்து இனப் பெருக்கமும் செய்கிறது? வியப்புக்குரிய வினாதான். தற்காப்புக்காக இது கையாளும் ஒரே முறை இறந்தது போலப் பாசாங்கு செய்வதுதான். அப்படியானால் ஓபோஸம் எப்படி உயிர் வாழ முடிகிறது? இவ்வினாவுக்குப் பல விடைகள் உண்டு. ஓபோஸம் பகலெல்லாம் மரப் பொந்துகளிலோ மரத்தின் வேர் இடுக்குகளிலோ பதுங்கியிருந்து இரவு நேரத்தில்தான் உணவு தேடக் கிளம்புகிறது. இரண்டாவது, இரவு உணவு வேட்டையின் போது இது குடியானவனின் கோழிக் குஞ்சு, பறவைகளின் முட்டை இப்படி எதிர்ப்படும் எதையும் தின்றுவிடும் இயல்புடையது. மூன்றாவதாக இது தன் உடலில் தோலுக்கு அடியிலே கொழுப்பைச் சேமித்து வைத்துக் கொள்ளுகிறது. இதனால் மோசமான மாரிக்காலத்தில் நீண்ட நாட்கள் உணவு கிடைக்காவிடில்கூட இதனால் உயிர் வாழ முடிகிறது!

ஆஸ்திரேலியாவில் உள்ள ஓபோஸம் பார்வைக்கு நாயைப் போல இருக்கும். யூகாலிப்டஸ் மரத்தில் வாழும். அதன் இலைகளையே உணவாகக் கொள்ளும் குணமுடையது. ரோமப்பொருள், வியாபாரிகளுக்கு ஓபோஸத்தின் தோல் விலை மதிப்பற்ற ஒன்றாகும்.

தெரிந்து கொள்ளுங்கள்:


சந்தனம்


சோப்புத் தேய்த்துக் குளித்தவுடன் நமக்கெல்லாம் ஒரு புத்துணர்ச்சி ஏற்படுகிறது அல்லவா? அதுவும் சந்தன சோப் என்றால் கேட்கவே வேண்டாம். நம் வீட்டில் பெரியவர்கள் சந்தனக் கட்டையை ஈரக் கல்லின் மீது தேய்த்து, சந்தனம் குழைத்தெடுத்து நெற்றியில் விட்டுக் கொள்கிறார்கள்.

சந்தனம் குளுமையைத் தரக் கூடியது. அதன் மணம் இனிமையானது. விரும்பப்படுவது.

கடைகளில் விற்கப்படும் மஞ்சள் நிறமான பொடி நல்ல சந்தனமன்று. சந்தனக் கட்டையால் அரைக்கப்பட்டுத் தயார் செய்யப்படுவதே மணம் மிகுந்த சந்தனம். சந்தனக் கட்டையும் சந்தனத் தூளும், சந்தனத் தைலமும் வனத் துறை அலுவலகங்களில் விலைக்குக் கிடைக்கும்.

நம் வீட்டில் ஒரு சந்தன மரம் நட்டால் என்ன? பலர் நினைத்துக் கொண்டிருப்பதைப் போல அது சட்டவிரோதமான செயல் ஒன்றும் அல்ல. நீங்கள் தாராளமாக உங்கள் வீட்டில் சந்தன மரம் வளர்க்கலாம். ஆனால் சந்தன மரம் வீடுகளில் வளராது. சந்தன மரம் ஒரு புல்லுருவி! ஆமாம், தன்னைத் தேய்த்துக் கொண்டு பிறருக்கு மணம் தரும் சந்தனம் ஒரு **புல்லுருவி!** புல்லுருவி என்றால் என்ன





என்று உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். புல்லுருவிகள் தரையில் முளைப்பதில்லை. ஏற்கனவே முளைத்து வளர்ந்துள்ள மரங்களின் மீது புல்லுருவி வளர்கிறது. மரத்தின் உணவைக் கலபமாகத் தான் இழுத்துக் கொண்டு சொகுசாக வளர்கிறது புல்லுருவி. பிறர் உழைப்பில் சுகம் காணுவோரை இதனால்தான் நாம் 'புல்லுருவிகள்' என அழைக்கிறோம்.

புல்லுருவிகளில் பல ரகங்கள் உள்ளன. சந்தன மரம் ஒரு 'வேர்ப் புல்லுருவி'. இது எல்லா மரங்களையும் போலவே பூமியின் மீது வளருகிறது. ஆனால் இதன் வேர்கள் பக்கத்தில் உள்ள மரங்களின் வேர்களைப் பிடித்துக் கொள்கின்றன. பக்கத்து மரங்களின் வேர்கள் உறிஞ்சும் உணவையும் நீரையும், சந்தன மரத்தின் வேர்கள் தமக்கு உறிஞ்சிக் கொள்ளுகிறது. எனவே சுற்றிலும் மரங்கள் இருந்தால்தான் சந்தன மரம் வளரும். காடுகளில் நிறைய மரங்கள் உள்ளனதால் சந்தன மரம் அங்கே நன்றாக வளருகிறது. குறிப்பாகக் கருவேல மரங்கள் சூழ்ந்த இடங்களில் சந்தன மரம் நன்றாக வளருகிறது.

மைசூர் மாநிலக் காடுகளில் நிறையச் சந்தன மரங்கள் உள்ளன. மைசூர் சந்தன சோப் பிரசித்தி பெற்றது. சந்தனக் கட்டையிலிருந்து இறக்கப்படும் சந்தனத் தைலம் (சந்தனாதித் தைலம் அல்ல) மணம் மிகுந்தது. இது வாசனைத் திரவியங்கள், ஊதுவத்திகள், மற்றும் மருந்துகள் தயாரிக்க உதவுகிறது. சந்தனக் கட்டையில் செதுக்கப்பட்ட கலைச் சிறப்பு மிக்க அழகுப் பொருட்கள் பெரும் அளவில் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றன.

தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூரை அடுத்த ஜவ்வாது மலைக் காடுகளில் சந்தன மரங்கள் உள்ளன. சந்தனக் கட்டைக்காக சந்தன மரங்களை வெட்டுவது இல்லை. உயிருள்ள மரங்கள் எக் காரணம் கொண்டும் வெட்டப்பட மாட்டா. வனத் துறையினர் சந்தன மரங்களைக் கண்கள் போல பாதுகாக்கின்றனர். அந்நியச் செலாவணி சம்பாதித்துத் தரும் பொருளாதலால், சந்தன மரங்கள் ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்படுகின்றன. பட்டுப்போன சந்தன மரங்களைக் கணக்கெடுத்தவண்ணம் இருக்கின்றனர் வனத்துறையினர். பட்டுப் போன மரங்கள் கணக்கெடுக்கப்பட்ட பின்னர், அவை வேரோடு கெல்லி எடுக்கப்படுகின்றன. பின்னர் அவற்றைத் துண்டு துண்டாக வெட்டி, டிப்போவுக்குக் கொணர்ந்து, அங்கே ஏலம்விடுகின்றனர்.

சந்தன மரத்தின் மேல் பகுதி அத்தனை மணமுடையது அன்று. சற்றே கரிய நிறமுள்ள உள் வைரம் சிறந்த மணம் வீசும்.


அடுத்த முறை யாராவது சந்தனப் பேலாவை நம்மிடம் நீட்டினால், 'உன்னைப் பற்றி எனக்கும் கொஞ்சம் தெரியும்' என்று எண்ணிக் கொண்டே நாம் சந்தனப்பேலாவில் கையை விடுவோம் இல்லையா!

— A. சங்கரன்




வீராதி வீரன்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி..
11
ரஹீம் தன் தோழர்களை வரிசையாக நிற்க வைத்துப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தான்...
வீரர்களே! முக்தி வாஹினிகளுக்கு உதவுவதில் நமக்குப் பெருமை. நம் நாட்டுக்கு விடுதலை. ஜெய் பங்களாதேஷ்!
அப்போது படுகாயமடைந்த பாகிஸ்தானியச் சிப்பாய்கள் மூவர் தள்ளாடியபடியே முகாமுக்குள் வந்தனர்..
என்னப்பா இது கோலம்?
ஒரு வங்காளிப் பையன் நமக்கு ரொம்பத் தொல்லை தரான் சாப். இன்னிக்குக் கைக் குண்டை வீசி நம்ம சப்ளைகளை யெல்லாம் நாசப் படுத்தி விட்டான்.
அந்தக் காப்டனுக்கு ரஹீம் யார் என்பதில் ஒரு சந்தேகம். அதைத் தீர்த்துக் கொள்ளச் சிறைப்பட்டிருக்கும் ஒரு முக்தி வாஹினி நர்ஸை அழைத்து வர உத்தரவிட்டான். அந்த நர்ஸ் ரஹீமின் தாயார்தான்.
உன் மகன் ஒளிந்து கொண்டிருக்கும் இடத்தைச் சொல். சொல்லாவிடில் நீ ரொம்ப வேதனைப் பட வேண்டியிருக்கும்....
பேசமாட்டாயா? உன்னைப் பேச வைக்க எனக்குத் தெரியும். உன் மகனைக் கண்டு பிடிக்கும் வழியும் எனக்குத் தெரியும். கொண்டா, இப்படி உன் — கைப் பையை.
பாகிஸ்தானியரிடம் சிறைப்பட்டிருந்த, சமூக சேவகியான ரஹீமின் தாயாரிடமிருந்த கைப் பையைச் சோதனையிட்ட போது..
அச்சா! அருமை மகனின் அழகுப் போட்டோ! எங்களுக்கு வேண்டியதும் இதுதான்.
இரண்டு நாட்களுக்குப் பிறகு ரஹீம் தன் வீரர்களுடன் தாக்குதலுக்கு உட்பட்ட தெரு வழியே போய்க் கொண்டிருக்கும் போது, அவனுடைய நாய் ஜிம்மி எதையோ பார்த்து விட்டுக் குதூகலமாகக் குரைத்தபடி ஓடியது....


ஜிம்மி தாவித் தாவிக் குதித்துக் குரல் கொடுத்தது. ஒரு பெரிய சுவரொட்டியைப் பார்த்தது. அந்தப் போஸ்டரில்...
"ரஹீம்" என்ற இந்தப் படத்திலுள்ள பையனைப் பிடித்துத் தருபவர்களுக்கு... ரூ.10,000 பரிசு — தரப்படும்...
ஊர் முழுவதும் ரஹீமின் படம் போட்ட போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. அவர்கள் எதிர் பார்த்தபடி அவை ரஹீமைக் காட்டிக் கொடுத்தன. எப்படி? யார் துரோகியானார்கள்?
அதோ, அந்த நாயின் குரல்? அது அந்தப் பையனுடைய செல்ல நாய்தான். வாருங்கள்.
ஜிம்மி, காரியத்தைக் கெடுத்து விட்டாயே, நீ, பாவம் உனக்குத் தெரியுமா அந்தப் படத்திலுள்ள ஆபத்து? அதோ வருகிறார்கள் கராத்தித் தடியர்கள். இந்த இடி பாடுகளுக்குப் பின்னாலிருந்து என் துப்பாக்கியால் பதில் சொல்லுகிறேன்.
இவர்கள் அதிக நேரம் தாக்குப் பிடிக்க முடியாது. ஜம்பு, உனக்குத்தான் ரைஃபிளைக் கையாளத் தெரியுமே! இந்த இடி பாடுகளுக்குப் பின்னாலிருந்தபடி அவர்கள் துப்பாக்கிக்குப் பதில் சொல்லிக் கொண்டிரு..
அதற்குள் நாங்கள் பத்திரமான இடத்துக்குப் போய் விடுகிறோம். ஜம்பு நீயும் பின்னால் வந்து சேர்ந்துக் கொள்.
ரஹீமின் தந்திரம் பலித்தது. ஜம்புவின் குறிகள் கோணல் மாணலாக இருந்தாலும் கூட விரோதிகளை முன்னேற விடாமல் தூரத்திலேயே நிற்க வைத்தன.


ரைஃபிளில் குண்டு தீர்ந்து போயிற்று. துப்பாக்கி வெடிக்காது போகவே ஜிம்புவுக்கு ஆத்திரமான ஆத்திரம். துப்பாக்கியைத் தூக்கிக் குலுக்கிற்று கோபத்துடன். தாக்குதல் நின்று விடவே பாகிஸ்தானியர் வேகமாக முன்னேறி வந்தார்கள்...
அவர்கள் ஓடி வருவதைக் கண்ட ஜிம்பு துப்பாக்கியைத் தூர வீசி, விட்டுக் குபீரென்று ஒரு வீட்டின் ஜன்னலுக்குள் பாய்ந்து தாவி, ரஹீமைத் தேடி ஓடியது. தங்களோடு போராடியது ஒரு குரங்கு என்பதை அறிந்த விரோதிகள் விக்கித்துப் போனார்கள்..
ஊர் முழுவதும் என் படம் போட்ட போஸ்டர். இனி அந்தப் பகுதிகளில் உலவ முடியாது. நல்ல பாதுகாப்பான இடத்தைத் தேட வேண்டும். அதோ கடலில் ஒரு மீன்பிடி படகு.. பாறைகளுக்கிடையே சிக்கிக் கொண்டு விட்டதா?
இப்போதைக்கு இப் படகு, பாதுகாப்பான இடமாகத்தான் தோன்றுகிறது. அதற்குள் தோழர்களுடன் சில காலம் மறைந்திருக்கலாம்.. மெல்ல நீந்தி வாருங்கள்.
ரஹீமின் தோழர்கள் படகுக்குள் வந்ததும் படகைப் பார்வையிடலானான் ரஹீம்...
ஜன்னல் போன்றதோர் துவாரத்தின் வழியே படகிலிருந்த அறைக்குள் எட்டிப் பார்த்த போது கறுப்பு நிறமுடைய ஓர் உறுதியான கரத்திலிருந்த வலுவான கட்டை ரஹீமின் தலையை வேகமாகத் தாக்கிற்று. அந்த விநாடி அவன் மூர்ச்சையானான்..

வலியை வெல்ல வழி வகுத்தவர்

அவர் ஒரு புகழ் பெற்ற டாக்டர். ஒருநாள் அவர் ஒரு மருந்தைச் சோதிக்க விரும்பினார். அச்சோதனைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்ளவும் முடிவு செய்தார். தம் மனைவியையும் அவளது சகோதரியையும் அழைத்துத் தம் அருகில் அமர்த்திக் கொண்டார். இரவுச் சாப்பாடு முடிந்தது. சிறிது நேரத்தில் டாக்டர் ஒரு கண்ணாடிக் கோப்பையை எடுத்தார். ஒரு கண்ணாடிப் புட்டியிலிருந்த தெளிந்த திரவத்தைக் கோப்பையில் ஊற்றினார். அந்தக் கோப்பையைத் தம் மூக்குக்கு நேரே பிடித்துக் கொண்டு முகரலானார். ''இப்போது எனக்கு என்ன ஏற்படுகிறது என்பதைப் பயப்படாமல் கவனியுங்கள்'' என்று தம் மனைவியையும் தம் மைத்துனியையும் கேட்டுக் கொண்டார் டாக்டர்.

அவ்விருவரும் டாக்டரை வியப்புடனும் கவலையுடனும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர் அந்தக் கோப்பையில் உள்ள தெள்ளிய திரவத்தை ஆழ்ந்து சுவாசிக்கலானார். அந்தத் திரவத்திலிருந்து கிளம்பிய ஆவி அவரது மூக்கினுள் புகுந்தது. டாக்டர் நிலை கொள்ளாமல் எழுந்திருந்தார். பெண்மணிகள் இருவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர்கள் திடுக்கிடும்படியாக டாக்டர் திடீரென்று அப்படியே மயங்கிச் சாய்ந்தார் கீழே.

டாக்டரின் மனைவிக்குப் பீதியினால் முகம் வெளுத்து விட்டது. பரபரப்புடன் கணவரின் அருகில் ஓடினாள். சகோதரிகள் இருவரும் டாக்டரை மெல்லத் தூக்கிப் படுக்கையில் கிடத்தினார்கள். டாக்டர் நினைவிழந்து கிடந்தார். ஆனால் மூச்சு ஓடிக் கொண்டிருந்தது. அவரது கைகளையும் கால்களையும் இருவரும் தேய்த்துச் சூடு உண்டாக்கினார்கள் கவலையுடன். கொஞ்ச நேரத்தில் டாக்டர் மயக்கம் தெளிந்து கண் விழித்தார். அவர்கள் முகத்தில் கவலை. ஆனால் அவர் முகத்திலோ களிப்பு!

''நான் நினைத்தபடி இந்த மருந்து வேலை செய்கிறது. பல வருஷங்களாக நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்த அற்புத மருந்து இது. இதன் பெயர் '**குளோராஃபாம்**'. இனி நோயாளிகள் வலியை உணராதபடி டாக்டர்கள் அறுவைச் சிகிச்சை செய்ய முடியும்'' என்றார் டாக்டர். இவருடைய பெயர் ஜேம்ஸ் சிம்ஸன். மயக்க மருந்தை மருத்துவ உலகுக்கு அளித்தவர்.

குளோரோஃபாரத்தைத் தம்மீது சோதித்துக் கொண்ட சில வாரங்களுக்குப் பிறகு ஒரு நாள் – 1847ம் ஆண்டு நவம்பர் 4ந் தேதி—இதே சோதனையை மறுபடியும் நடத்தினார். இந்தத் தடவை அவருடன் வேறு இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். மூவரும் ஒரு மேஜையைச் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டார்கள். வாயகன்ற சற்றே குழிவான கண்ணாடித் தட்டுக்களில் நிறமற்ற அந்த மாயத் திரவம் ஊற்றப்பட்டது. மூவரும் குனிந்து அதிலிருந்து எழும் ஆவியை ஆழ்ந்து சுவாசிக்கலானார்கள். சற்றைக்கெல்லாம் ஒவ்வொருவராக மயங்கிக் கீழே சாய்ந்தார்கள். க்ளோரிக் ஈதர் அல்லது க்ளோரோஃபாம் மறுபடியும் தன்னுடைய அற்புத சக்தியை நிரூபித்து விட்டது. அந்த மருந்தினால் மனிதர்களை நினைவிழக்கச் செய்ய முடியும் என்பது உறுதியாயிற்று. பல வருஷ கால ஆராய்ச்சியும் அடுத்தடுத்து ஏற்பட்ட பல ஏமாற்றங்களும் முடிவில் வெற்றியாக மாறுமானால் அது எப்படிப்பட்ட மகிழ்ச்சியைத் தரும்?


இங்கிலாந்தில் உள்ள எடின்பரோ நகரை அடுத்து ஒரு சிறிய நெசவுத் தொழில் ஊர். அதன் பெயர் பாத்கேட். இந்த ஊரில் 1811ல் பிறந்தார் ஜேம்ஸ் சிம்ஸன். இவரது தகப்பனார் ரொட்டி தயாரிப்பவர். சிறுவன் ஜேம்ஸ் தாவர இயல், மண் இயல் இவைகளில் ஆர்வம் மிகுந்தவனாக இருந்தான். ஊரை அடுத்த மலைப் பகுதியில் அபூர்வமான பாறைகளையும், தாவரங்களையும் தேடி அலைந்து கொண்டிருப்பான் ஜேம்ஸ். பதினெட்டு வயதாயிற்று. விஞ்ஞானத்தில் ஏற்பட்ட பிடிப்பு சிம்ஸனை எடின்பரோ சர்வகலாசாலையில் மருத்துவப் பயிற்சி மாணவனாக்கியது.

ஜேம்ஸின் பேராசிரியர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த பிரபல உடல் கூறு வல்லுனரான ராபர்ட் நாக்ஸ். தனது ஆசிரியர் நாக்ஸ் அறுவைச் சிகிச்சை செய்யும்போது உடனிருந்து அதைக் கூர்ந்து கவனிக்கும் வாய்ப்புப் பெற்றான் ஜேம்ஸ். அந்தக் காலத்தில் அறுவைச் சிகிச்சை செய்யும்போது நோயாளியை உணர்விழக்கச் செய்ய அதிக போதை தரும் விஸ்கியைக் கொடுப்பார்கள். அது அவ்வளவு திருப்திகரமான முறையல்ல. சரியாகவும் வேலை செய்வதில்லை. ஆனால் இதை விட்டால் அக்காலத்தில் சர்ஜன்களுக்கு வேறு மார்க்கமும் கிடையாது.

ஆபரேஷன் செய்யும் இடத்தின் நிலைமையைக் கண்டு அதிர்ச்சியடைந்த

ஜேம்ஸ் ஒரு காலத்தில் இதில் சீர்திருத்தம் செய்தே தீருவேன் என்று உறுதி பூண்டார். பத்தொன்பதாவது வயதில் எடின்பரோ ராயல் காலேஜ் சர்ஜன்களின் சங்கத்தில் அங்கத்தினரானார். உடனே தமது ஆராய்ச்சிகளையும் ஆரம்பித்து விட்டார்.

சிறிது காலம் பாதாலஜி (Pathology) பேராசிரியருக்குத் துணைவராக வேலை செய்த பிறகு எடின்பரோ சர்வ கலாசாலையில் விரிவுரையாளராக அமர்த்தப்பட்டார். இதன் பிறகு நகரத்தின் ஆஸ்பத்திரி ஒன்றில் இவரை ரெஸிடெண்ட் டாக்டராக்கினார்கள். நல்ல பிராக்டீஸ். நல்ல வருவாய். வியாதிகளைப் பற்றி விவாதங்கள், பிரசங்கங்கள், விருந்துகள், கேளிக்கைகள். தூங்கக்கூட நேரமின்றி உழைத்தார். ஆராய்ச்சிக்கு நேரமே இல்லை. இது 1835ம் ஆண்டில்.



இதன் பிறகு நான்கு ஆண்டுகள் கழித்து மணம் புரிந்து கொண்டார் ஜேம்ஸ். தொழிலில் முன்னேற்றம். பிரபுக்கள், பெரிய மனிதர்களின் குடும்ப டாக்டராகிப் பொருளும் புகழும் குவிந்தன. வசதியான வாழ்க்கையில் கொஞ்ச காலம் தமது ஆராய்ச்சிகளைப் பற்றி மறந்திருந்தாலும் மறுபடியும் அது இவரது நினைவில் நெருடலாயிற்று. பிள்ளைப் பேறு வைத்தியத்தில் கைராசியுள்ளவராக விளங்கியதால் ஏராளமான பெண் நோயாளிகள் ஜேம்ஸுக்கு இருந்தனர். சில காலம் ஹிப்னுடிஸ முறையில் அவர்களை நினைவிழக்கச் செய்ய முயன்று பார்த்தார்.


ஹிப்னுடிஸம் நினைத்தபடி பலன் தரவில்லை. ஆகவே 1847ல் ஈதரை உபயோகித்து முதல் ஆபரேஷன் செய்ய முடிவு செய்தார். ஈதரைக் கொண்டு அமெரிக்காவில் ஆபரேஷனை வெற்றிகரமாகச் செய்ததாகச் செய்திகளைப் படித்திருந்தார் சிம்ஸன். ஆனால் ஈதர் குபீரென்று தீப்பிடித்துக் கொள்ளக்கூடியது. அந்தக் காலத்தில் ஆபரேஷன் தியேட்டர்களுக்கு, காஸ் விளக்குகளாலும், மெழுகுவத்திகளாலும்தான் வெளிச்சம் கொடுக்கப்பட்டது. ஈதரோ மிகக் குறைந்த கொதி நிலையிலும் ஆவியாக மாறக் கூடியது. அந்த ஆவி தீப்பற்றக் கூடியதும்கூட... இதனால்

நோயாளிக்கு அபாயம். ஆகவே வெறும் ஈதரை மட்டும் பயன்படுத்துவதைக் கைவிட்டார். இந்த நிலையில் பல்வேறு ரசாயனப் பொருள்களைப் பற்றி ஆராய லானுர். ஒரு நிலையில் ஹைட்ரோக்ளோரிக் அமிலத்துடன் ஈதரைக் கலந்து ஒரு திரவத்தைத் தயாரிக்க நேர்ந்தது. அதுவே நிறமற்ற புதிய திரவமான க்ளோரோஃபாம்.

இதன் தன்மையை வீட்டிலும் வேறு இரண்டு சக டாக்டர்களுடனும், சோதனை செய்து உறுதிப் படுத்திக் கொண்ட பிறகு நடைமுறையில் இதை உபயோகிக்கத் தீர்மானித்தார் டாக்டர் சிம்ஸன். எடின்பரோவில் உள்ள ஆஸ்பத்திரி ஆபரேஷன் தியேட்டரில் தமது புதிய கண்டுபிடிப்பை நோயாளிக்குச் செலுத்தினர். வெற்றிகரமாக ஆபரேஷன் செய்து முடிப்பதைப் பொதுமக்களும் காணச் செய்தார். சிம்ஸனின் புதிய மருந்தின் புகழ் இங்கிலாந்து முழுவதிலும் பரவியது. எல்லா ஆஸ்பத்திரிகளிலும் இதைப் பயன்படுத்தினர்கள். ஒவ்வொரு நாளும் மூட்டையாகப் பாராட்டுக் கடிதங்கள் சிம்ஸனுக்கு வந்து குவியலாயின. ஆனல் ஒரே ஒரு இடத்திலிருந்து மட்டும் எதிர்ப்புக் கிளம்பியது. மத குருமார்களிடமிருந்து தான் அது. இயற்கையின் நியதியில் தலையிடுவது தகாது என்பது அவர்கள் வாதம். ஆனல் சிம்ஸன் அவர்களின் கண்டனத்தைப் பொருட்படுத்தவில்லை. 1866ல் விக்டோரியா மகாராணி இவரது சேவையைப் பாராட்டிக் கௌரவித்தார். வலியை மறக்கடிக்கும் மகத்தான தொண்டினை நோயாளிகளின் உலகுக்குச் செய்ததற்காக ஜேம்ஸ் சிம்ஸனைப் பாராட்டாதவர் கிடையாது.

க்ளோரோஃபாம் இன்றைய மருத்துவ உலகில் எத்தகைய வரப்பிரசாதமாக விளங்குகிறது என்பதை நாம் அறிவோம்.

—**கிருஷ்ணவேணி**





(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யவனை ஒருவன், ''அண்ணு! என்னல் இனி தொடர்ந்து ஓடிவர முடியாது! என் காலணியின் தோல் **'கயிறு'** அறுந்து விட்டது'' என்ருன்.

'கயிறு' என்ற வார்த்தை ஓடும் ஒட்டகத்தை 'டக்' என்று நிற்க வைத்தது மட்டுமல்ல; அதைக் கூறியவனின் முன்னல் மண்டியிட்டும் உட்கார்ந்தது. அதன் முதுகிலிருந்த அழகியான யுதாவைக் கண்டான் அவன். அவளைத் தன் கைகளில் தாங்கி எடுத்தபோது அவள் உடலில் பாய்ந்திருந்த கருஞ் சிறுத்தையின் நகம் நழுவிக் கீழே விழுந்தது. யுதாவின் உயிரும் திரும்பியது. தன்னைத் தாங்கியபடி கனிவோடு பார்க்கும் ஆணழகனைக் கண்ட யுதா அவன்மீது காதல் கொண்டாள். இருவரும் கோட்டைக்குத் திரும்பி வந்தார்கள். ஏழு பேரும் தன் தங்கை உயிரோடு திரும்பியதைக் கண்டு சந்தோஷத்தினல் எப்படிக் குதித்திருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். தன் அண்ணன்மார்கள் ஏழு பேருடனும், தான் மணக்கப் போகும் காதலனுடனும் பெற்றோர்களைக் காணப் புறப்பட்டாள் யுதா. இப்போது அவள் அந்தப் பூனையை அன்போடு தூக்கித் தன் மடிமீது வைத்துக்கொண்டு வாஞ்சையோடு தடவிக் கொடுத்தாள். பூனையும் நடந்ததை மறந்து அவளை மன்னித்து யுதாவின் மடியில் சொகுசாக வீற்றிருந்தது.

நான் முதலாளியானால்...

கிருஷ்ணப்பா பெரிய செல்வந்தர். நருக்கு உதவும் குணம் அவருக்குச் றிதும் கிடையாது.

ஒரு நாள் அவருடைய நண்பர் சின் 'ப்பா சிங்கப்பூருக்குப் போய் வந்தார். ங்கப்பூரில் 'டொரியாம் பழம்' புகழ் பற்றது. அது இந்தியாவில் கிடைக் 7த பழம். கனமானது. அதை அவர் ருஷ்ணப்பாவுக்குத் தம் வேலைக்காரன் வலிங்கப்பாவிடம் கொடுத்து அன் ளிப்பாக அனுப்பினார். அவன் அதைத் ரக்கிக் கொண்டு கிருஷ்ணப்பாவின் ாளிகைக்கு வந்து சேர்ந்தான்.

எத்தனையோ தடவை இப்படி அன் ளிப்பான பொருள்களைக் கொண்டு 'ந்தபோதிலும் முதலாளி கிருஷ் ணப்பா அந்த வேலைக்காரனுக்கு ஒரு ாசும் கொடுக்க மாட்டார். இது நெடு ாட்களாக வேலைக்காரன் மனத்தை .றுத்தியது.

கிருஷ்ணப்பாவின் முன்பு வேலைக் ாரன் சிவலிங்கப்பா டொரியாம் 'ழத்தை வைத்து, ''எங்கள் முதலாளி ;ங்களுக்கு இதை அன்பளிப்பாக அனுப்பியிருக்கிறார்'' என்று மரியாதை 1ன்றி உரக்கச் சொன்னான். இதைக் 'கேட்ட கிருஷ்ணப்பா கோபம் அடைந் ார். 'அடே! நீ மரியாதை தெரியாத னாக இருக்கிறாய். இப்படித்தானா ஒரு செய்தியைப் பணிவில்லாமல் கூறுவது? உனக்கு ஒழுக்க முறை தெரியவில்லை. ான் இதோ சொல்லித் தருகிறேன், பார்!' என்று கூறி, தம் இடத்தை விட்டு எழுந்து, அந்த நாற்காலியில் வேலைக்காரனை உட்கார வைத்தார்.


''பையா, நீ முதலாளி என்று வைத் துக்கொள். நான் வேலைக்காரன் என்று வைத்துக் கொள். டொரியாம் பழத்தை நான் உனக்கு எடுத்து வருவதாக வைத் துக்கொள். நான் வேலைக்காரனாக எப் படி நடந்து காட்டுகிறேன் என்பதைக் கவனி. அதைப் போலவே பிறகு நீ நடந்துகொள்'' என்றார் கிருஷ்ணப்பா.

வேலைக்காரன் முதலாளியின் நாற் காலியில் உட்கார்ந்திருந்தான். முத லாளி டொரியாம் பழத்தைத் தூக்கிக் கொண்டு கதவை மெதுவாகத் திறந்து உள்ளே நுழைந்தார். வேலைக்காரனைப் பார்த்ததும், ''பெரிய முதலாளி அவர்களே, வணக்கம்'' என்று தலை யைத் தாழ்த்திக் கும்பிட்டார். மேசைக் கருகே சென்று, ''பெரிய முதலாளி அவர்களே! எங்கள் முதலாளி தங்க ளுக்கு அவருடைய அன்பைத் தெரி வித்துக் கொள்கிறார். அவர் தங்களுக்கு இச்சிறு பரிசை அனுப்பியிருக்கிறார். இதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண் டும் என்று அன்புகூர்ந்து அவர் வேண்டிக் கொள்கிறார்'' என்று கூறிப் பணிவுடன் பழத்தைக் கீழே வைப்பது போலப் பாவனை செய்தார் கிருஷ்ணப்பா!

அதைக் கேட்ட வேலைக்காரன், ''ஓ! அப்படியா? மகிழ்ச்சி. நமது இதயம் கனிந்த நன்றியை அவருக்குக் கூறு. நீ இங்கேயே உணவருந்திவிட்டுச் செல். உன் பணிக்காக இந்தப் பத்து ரூபாயை நீ வைத்துக்கொள்'' என்றான்.


இதைக் கேட்ட முதலாளி கிருஷ் ணப்பா மிகவும் வியப்படைந்தார். வேலைக்காரனுக்கு மரியாதை கற்பிக்கப் போய் அவன் தம் கருமித்தனத்தையும் இரக்கமற்ற குணத்தையும் இடித்துக் காட்டுவது போல நடித்துக் காட்டிய தையும் தமக்குத் தாராளத் தன்மை யைச் சொல்லிக் கொடுத்ததையும் உணர்ந்தார். அவன் திறமையைப் பாராட்டி அவனுக்கு நிஜமாகவே பத்து ரூபாய் பரிசாக அளித்து அனுப்பினார்.

— சோமலே.



சுண்டு குண்டு சீமாத்தாத்தா

சாமா




சுண்டுவுக்கும் குண்டுவுக்கும் கால்பந்தாட்டப் பந்தயம் பார்க்க வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. பேரக் குழந்தைகளின் ஆசையை நிராசையாக்க மாட்டார் சீமாத் தாத்தா. ஐந்து ரூபாய் கொடுத்து பந்தயம்பார்க்க அனுப்பினார். கிளம்பிய சுண்டுவும்குண்டுவும் 'லேசாக' டிபன் செய்ய ஒரு ஹோட்டலுக்குள்



நுழைந்தார்கள். சப்புக் கொட்டியபடி அடுத்தடுத்து ஆர்டர் செய்யவே டேபிளில் பிளேட்டுகள் குவிந்தன. பில்லும் நாலு ரூபாய்க்கு ஏறி விட்டது. பாவம்! குண்டுவும் சுண்டுவும் மீதி ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு 'ஃபுட்பால் மாட்ச்' பார்ப்பது எப்படி? பந்தய மைதானத்தின் காம்பவுண்டு சுவரில் ஏதாவது ஓட்டை இருக்கிறதா என்று தேடலானார்கள்.

சுவரின் அருகே ஒரு மரம் இருந்தது. அதில் ஒரு வலுவான கிளையில் இருவரும் இடம் பிடித்து உட்கார்ந்து, பந்தயத்தை ரசிக்கத் தயாரானார்கள். காவல்காரனுக்கு அது பொறுக்கவில்லை. மரத்தையே வெட்டி வீழ்த்தி விட்டான். சுண்டுவும் குண்டுவும் சளைக்கவில்லை. வெட்டித் தள்ளிய மரக் கிளைகளை அப்படி இப்படி ஒன்று சேர்த்துக் கட்டி ஒரு பரண் தயாரித்து அதில் உட்கார்ந்து கொண்டார்கள். எமகாதக காவல்காரன் வந்து விட்டான். சுண்டுவையும் குண்டுவையும் கீழே இறக்கி விட்டு, மரக் கிளைகள் பெரிதாக இருப்பதனால் தானே இப்படிப் பரண் அமைக்கிறார்கள் என்று கிளைகளைத் துண்டுக் கட்டைகளாக்கி விட்டுப் போனான், மின்விசை யந்திரம் கொண்டு. சுண்டு குண்டுவுக்கா 'ஐடியா' தெரியாது? கட்டைகளைப் பக்குவமாக அடுக்கி மேடை தயாரித்து அதன்மீதிருந்து பந்தயத்தைச் சுவாரசியமாக ரசிக்கலானார்கள். இதற்கு மேல் காவல்காரனால் ஏதும் செய்ய முடியவில்லை. எங்கோ வெளியே போய் விட்டு மைதானப் பக்கமாக வந்த சீமா தாத்தா தம் பேரன்கள் பந்தய மைதானத்துக்கு வெளியே மரக்கட்டை மேடை மீது உட்கார்ந்து பந்தயம் பார்க்கும்



கோலத்தைக் கண்டபோது திகைத்துப் போனார். 'டிக்கட்டுக்குப் பணம் கொடுத்தோமே ஏன் இப்படி மைதானத்துக்கு வெளியே இப்படி உட்கார்ந்து கொண்டு....' என்று குழம்பும் அவருக்குச் சுண்டுவும் குண்டுவும் ஹோட்டல் பில்லுக்கு நாலு ரூபாய்களுக்கு மேல் செலவழித்த மர்மம் எங்கே தெரியப் போகிறது?






அவரைப் பயப்படச்-
-செய்கிறேன்!
சிரிக்கச் சிரிக்க!
கண்டக்டர் : எப்பவும் உனக்கு மூணு வயதுதானா? உனக்கு எப்ப நாலு வயது ஆகும்?
பையன் : பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கியவுடன்!
சாமா
இதுக்குத்தான் அப்பவே சொன்னேன்,
கோழிக் குஞ்சோடு சேராதேன்னு!
1
2
பச்சைக் குதிரையா
எதுக்குடா நடுங்கிச் சாகறே?
'காமிரா' உன்னைக்
கடிக்கவா போறது?
தாண்டறே..?...
4
5
.. இரு.. இரு...


உன் கண் உன்னை ஏமாற்றினால்...!

○ இரண்டு அடி நீளமுள்ள ஒரு கயிற்றின் ஒரு முனையில் கனமானதொரு பொருளைக் கட்டி அதை அறையின் நடுவில் — உங்கள் பார்வைக்கு நேர் எதிராகப் பெண்டுலம் போல — ஊசலாடச் செய்யுங்கள். ஒரு கறுப்புக் கண்ணாடி (கூலிங் கிளாஸை) எடுத்து அதை



அணிந்து கொள்ளாமல் அதன் ஒரு கண்ணாடி வழியாக ஒரு கண்ணினால் ஊசலாடும் பெண்டுலத்தைப் பாருங்கள். கண்ணாடி மறைப்பில்லாத மற்றொரு கண்ணும் திறந்திருக்கட்டும். இரண்டு கண்களிலும் பெண்டுலத்தைப் பார்க்க வேண்டும். ஆனால் ஒரு கண்ணுக்கு முன்னால் மட்டும் கூலிங் கிளாஸ் மறைப்பு இருக்கட்டும். பெண்டுலம் பிரதட்சிணமாகச் சுழல்வது போலத் தோன்றும். இப்போது கறுப்புக் கண்ணாடியை அடுத்த கண்ணுக்கு மாற்றுங்கள். முன்போல் இரு கண்களும் ஊசலாடும் பெண்டுலத்தைப் பார்க்கட்டும். இப்போது பெண்டுலம் அப்பிரதட்சணமாகச் சுழல்வது போன்றிருக்கும். மாறிச் சுழலும் இந்த விந்தைக் காட்சி எதனால்?

○ அருகிலுள்ள படத்தைப் பாருங்கள். ஒரு தட்டில் உள்ள கேக்கில் ஒரு துண்டு வெட்டி எடுக்கப் பட்டிருப்பதுபோலிருக்கிறது இல்லையா? பத்திரிகையைத் தலைகீழாகத் திருப்பி இப்போது அதே படத்தைப் பாருங்கள். என்ன தெரிகிறது? வெட்டி எடுக்கப்பட்ட கேக் துண்டு அந்தத் தட்டில் இருக்கும். ஆனால் முன்பு இருந்த கேக்கின் பெரும் பகுதி மாயமாக மறைந்திருக்கும். இந்த மாயம் எப்படி? 'ஆப்டிகல் இல்யூஷன்' என்று மட்டும் விஞ்ஞானிகள் சொல்லுகிறார்களே ; தவிர நம் கண் ஏமாறும் இதன் காரணத்தை விஞ்ஞானிகளாலும் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.



காணாமல் போன திமில்

தரஜா

மார்கழி மாதம் வந்தாலே, ஒட்டகத்துக்கு உடம்புக்கு வந்துவிடும். ஜுரம், தலைவலி, கால் குடைச்சல் என்று படுத்துக் கொண்டுவிடும். இந்தத் தடவை அதன் போதாத காலம், மூன்று வியாதிகளுமாகச் சேர்ந்து கொண்டு தாக்கவே, அதன் பாடு திண்டாட்டமாகியது.

பத்து நாட்கள் ஜுரத்தில் கிடந்து, ஒன்றும் சாப்பிடாமல் இளைத்துப் போயிருந்த ஒட்டகம், ஜுரம் நின்றதும் கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டது. பகீரென்றது ஒட்டகத்துக்கு. காரணம், அதன் முதுகில் எப்போதும் இருக்கும் திமிலைக் காணோம்!

''அடப் பாவிகளா! நான் ஜுர வேகத்தில் கண்ணை மூடிக் கொண்டு படுத்திருக்கும்போது யாரோ போக்கிரிப் பசங்கள் என் திமிலைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டார்களே!'' என்று அங்கலாய்த்துக் கொண்டே வீட்டை விட்டுப் புறப்பட்டுக் காட்டிலுள்ள தன் நண்பர்களிடமெல்லாம் விஷயத்தைச் சொல்லிக் கண்ணீர் விட்டது. எல்லா மிருகங்களும், ''ஐயோ, பாவம்!'' என்று ஒட்டகத்தின்முன் பரிதாபப்பட்டாலும், அதன் தலை மறைந்ததும் தமக்குள் ரகசியமாகச் சிரித்துக்கொண்டன.

குண்டு யானை மற்ற மிருகங்களிடம், ''சுத்த அசடாக இருக்கிறதே; இந்த ஒட்டகம்...! அதன் முட்டாள்தனத்தை



அம்பலப்படுத்துகிறேன், பார்!'' என்று ஒட்டகத்தைத் தேடிச் சென்றது.

யானையைக் கண்டதும் ஒட்டகம், ''வா! வா! விஷயம் கேள்விப்பட்டாயா? என் திமிலை யாரோ திருடன் அடித்துக் கொண்டு போய்விட்டான்!'' என்றது.

''அது கிடக்கட்டும், அண்ணா!.... நாளைக்கு நம்ம வீட்டிலே ஒரு விருந்து. அதற்கு நீங்கள் கட்டாயம் வரவேண்டும்!'' என்றது யானை.

''சரி, எனக்காக ஸ்பெஷல் அயிட்டம் ஒன்று செய்வாயா?''

''சொல்லுங்கள், அண்ணா!''

''கொழுந்து வேப்பிலை என்றால் எனக்குப் பிடிக்கும் என்பதுதான் உனக்குத் தெரியுமே! அதை எனக்காகத் துவையல் அரைத்து வை!''

''பேஷாகச் செய்கிறேன்!''

மறுநாள் யானையின் வீட்டில் காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் வந்து சேர்ந்தன விருந்துக்கு. எல்லா மிருகங்களிடமும் ஒட்டகம் தான் உடம்பு சரியில்லாமல் படுத்துக் கொண்டிருந்ததையும், திமில் திருடு போன கதையையும் சொல்லிச் சொல்லி அழுதது. யானை அதைக் குறும்புச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டே இருந்தது.

விருந்து ஆரம்பித்தது. ஒட்டகம் நன்றாக நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு விருந்து சாப்பிட்டது. துவையலில் துளிக்கூட மிச்சம் வைக்கவில்லை!

விருந்து முடிந்த பிறகு யானை ஒரு பெரிய கண்ணாடியை எடுத்து வந்து ஒட்டகத்தின் முன்னால் வைத்து, ''அண்ணா! இப்போது உங்கள் அழகைக் கண்ணாடியில் பாருங்கள்!'' என்றது.

ஒட்டகமும் பார்த்தது. அடுத்த விநாடியே ஆச்சரியத்துடன் ஒரு கூச்சல் போட்டது. ''அடே! என் திமில் அதோ இருக்கிறதே! அதைத் திருடிக் கொண்டு போன பயல் நான் இங்கே சுவாரசியமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது எனக்குத் தெரியாமல் என் முதுகில் கொண்டு வந்து வைத்து விட்டான் போலிருக்கிறது! பலே!'' என்று கத்தியது.


மற்ற மிருகங்களெல்லாம் இதைக் கேட்டுப் பலமாகச் சிரித்தன. ''என்னடா! எதற்காகச் சிரிக்கிறீர்கள் இப்போது?'' என்று அதட்டலாகக் கேட்டது ஒட்டகம்.

எல்லோர் சார்பிலும் யானை முன் வந்து பதிலளித்தது:

''ஒட்டக அண்ணா!. நீங்கள் ஒரு விஷயத்தை மறந்து விட்டீர்கள்! நன்றாக வயிறு நிரம்பச் சாப்பிட்டால்தானே உங்கள் முதுகில் திமில் உண்டாகும்? அது உங்கள் ஆகாரத்தைச் சேமித்துவைத்துக் கொள்கிற இடம்தானே? நீங்கள் ஜுரத்தில் பட்டினியாகக் கிடந்ததால்தான் உங்கள் முதுகில் திமில் ஏற்படவில்லை. இந்தச் சாதாரண உண்மையைப் புரிந்து கொள்ளாமல், 'திமில் திருடு போய் விட்டது!' என்று அழுதீர்களே, அதை நினைத்துத்தான் சிரித்தோம்!''

இதைக் கேட்டதும் ஒட்டகத்துக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது. அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடியது.





மனம் போன போக்கில்

ஆர். முத்துக்குமாரசாமி

ஓர் ஊரில் ஓர் அரச மரம் இருந்தது. அம்மரத்திலிருந்த ஓர் அரச இலை தன் மனம் போன போக்கில் வாழ விரும்பியது. உடனே அது மரத்திலிருந்து தரைக்கு இறங்கத் தொடங்கியது. அச் சமயம் மழை பெய்தது. அதனால் அரச இலை கால் வழுக்கிக் கீழே விழுந்தது. விழுந்த இடத்தில் முள் ஒன்று இருந்தது. முள் அரச இலையைக் குத்தியது. முள்ளை எடுத்தெறிந்துவிட்டுப் புறப்படத் தொடங்கியது இலை.

அம்மரத்தின் அண்டையில் ஒரு குட்டிச் சுவர் இருந்தது. அதில் ஒரு மண்ணாங்கட்டி இருந்தது. அதுவும் தன் மனம் போன போக்கில் வாழ விரும்பியது. எனவே அதுவும் கீழே இறங்கத் தொடங்கியது. சுவரில் பாதித் தூரம் வந்ததும் கால் குவறிவிட்டது. உடனே பொத்தென்று கீழே விழுந்து உருண்டது. விழுந்த இடத்தில் கல் ஒன்று இருந்ததால் அதற்கு அடிபட்டது. வலியினைப் பொறுத்துக்கொண்டு மண்ணாங்கட்டி புறப்பட்டது.

மண்ணாங்கட்டி இருக்கும் இடத்தை அரச இலை அடைந்தது. மண்ணாங்கட்டி இலையைப் பார்த்து, 'நீ எங்கே போகிறாய் ?' என்று கேட்டது. உடனே மண்ணாங்கட்டி, ''நான் மனம் போன போக்கில் போகிறேன் '' என்றது. '' நானும் மனம் போன போக்கில் வாழப் போகிறேன். நாம் இருவரும் ஒன்று சேர்ந்தே போவோம்'' என்றது இலை. இரண்டும் சேர்ந்து புறப்பட்டன.

மண்ணாங்கட்டியும் அரச இலையும் கொஞ்ச தூரம் சென்றன. அப்போது காற்று இலேசாக வீசத் தொடங்கியது. காற்று தன்னைத் தூக்கிச் சென்று விடுமோ என்று அரச இலை பயந்தது. உடனே மண்ணாங்கட்டி, ''பயப்படாதே. நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்'' என்று சொல்லி அரச இலையின் மேல் மண்ணாங்கட்டி உட்கார்ந்து கொண்டது. அரச இலையைக் காற்றினால் தூக்கிச் செல்ல முடியவில்லை. அரச இலை காப்பாற்றப்பட்டது.. காற்று அடிப்பதும் நின்றது. மண்ணாங்கட்டியும் இலையை விட்டுக் கீழே இறங்கியது.

மண்ணாங்கட்டியும் அரச இலையும் சிறிது தூரம் சென்றன. அப்பொழுது மழை வந்தது. உடனே மண்ணாங்கட்டி மழை என்னைக் கரைந்து அழித்து விடுமோ என அஞ்சியது. உடனே அரச இலை மண்ணாங்கட்டியை நோக்கி, 'அஞ்சாதே ! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்' என்று சொல்லியது. உடனே மண்ணாங்கட்டியின் மீது தன் உடலைப் போர்த்தி மறைத்துக் கொண்டது. மழைத் தண்ணீர் மண்ணாங்கட்டி மீது விழாமல் தடுத்தது அரச இலை. அதனால் மண்ணாங்கட்டி மழையில் கரைந்து போகவில்லை. அரச இலை மண்ணாங்கட்டியை மழையில் நனையாதவாறு காப்பாற்றியது. மழையும் நின்றது. இலையும் மண்ணாங்கட்டியைக் கவிழ்ந்து மூடிக் கொண்டிருந்த நிலையிலிருந்து நகர்ந்தது.

இப்படி ஒன்றுக்கொன்று உதவியாக இருந்தாலும்; எத்தனை நாள் இப்படியே தன்னிச்சையாக வாழமுடியும்? சூறாவளி வந்தது. மண்ணாங்கட்டியை உருட்டி விட்டு இலையை எங்கோ கொண்டு போய்த் தள்ளியது. பெரு மழை வந்து மண்ணாங்கட்டியைக் கரைத்து ஆற்றோடு கலக்கச் செய்தது. ஆகவே.... என்று கதை சொல்லி வந்த தாத்தாவின் வார்த்தையை ''மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்'' என்று முடித்தார்கள் பேரக் குழந்தைகள்.





விளையாட்டு விந்தைகள்

) மலையிலிருந்து உருண்ட
டி அடிவாரத்தை அடைவது
ரு விளையாட்டு. விந்தையான
ந்த வீர விளையாட்டை ஆஸ்
ரேலியாவில் முதன் முதலில்
டியேறிய ஐரோப்பியர்கள்
ந்தக் காலத்தில் விளையாடி
ருக்கிறார்கள். மலை உருளல்
பாட்டியில் பங்கு பெறுப
ர்கள் மலையின் உச்சிக்குப்
பாய் தகுந்த சரிவாகத் தேர்ந்
தடுத்து உருண்டு வர ஆரம்
ப்பார்கள். சில வேளைகளில்
ாலிப் பீப்பாய்க்குள் புகுந்த
டியும் உச்சியிலிருந்து அடி
ாரத்துக்கு உருண்டு வரு
ார்கள். யார் முதலில் கீழே
ருகிறார்களோ, அவர்களே
வற்றி பெற்றவர்கள்.



) பாலடைக்கட்டி — சீஸ் — உருட்டுவது ஒரு
கை விளையாட்டு. இங்கிலாந்தில் உள்ள க்ளோ
செஸ்டர்ஷயரிலுள்ள காட்ஸ்வால்டு என்னு
டத்தில் இந்த சீஸ் உருட்டும் விளையாட்டு



வருஷா வருஷம் 'விட் மண்டே'யின்போது நடக்
கிறது. விளையாட்டைத் தொடங்கி வைப்பவர்
புராதன சம்பிரதாயப்படி வெள்ளைக் கவுனும்
பவர் தொப்பியும் அணிந்திருப்பார். இவர்
மலையுச்சியிலிருந்து சீஸ் கட்டியை உருட்டி விடு
வார். சரிவில் அது உருண்டு
ஓடும்போது போட்டி யிடும்
குழந்தைகள் அதைப் பிடிக்கப்
பின்னால் ஓடுவார்கள். எந்தப்
பையன் உருண்டோடும்
'சீஸை' மடக்கிக் கைப்பற்று
கிறானோ, அவனே வெற்றி
பெற்றவன். அவனுக்குப் பரி
சும் அந்தப் பாலடைக் கட்
டியும் சன்மானமாகத் தரப்
படும்.

○ ஆரம்ப நாட்களில் ஆஸ்
திரேலியாவில் பல விந்தை
யான விளையாட்டுகளும் பந்த
யங்களும் பழக்கத்தி லிருந்
தன. இதோ ஓர் உதாரணம்
பாருங்கள்: விக்டோரியா
மாநிலத்தில் உள்ள கீலாங்
என்னு மிடத்தில் 1854ம்
ஆண்டு டிசம்பர் மத்தியில்
வில்லியம் என்ற விளையாட்டு
வீரர் கீழ்க் கண்டவைகளைச்
செய்து காட்டினார். முதலில்
நூறு கெஜ ஓட்டத்தில் ஊரின்
ஓட்ட வீரருடன் போட்டி
யிட்டு ஜெயித்தார். இரண்
டாவதாக ஒன்றுக் கொன்று
ஒரு கெஜ தூரத்தில் பரவலாக
வைக்கப் பட்டிருந்த முப்பது
முட்டைகளைத் தம் வாயால்
கௌவி எடுத்தார்! எப்படி?
முட்டைகளைக் கையாலும்
தொடக் கூடாது. அவரது





முழங்கால்களும் தரையில் படக்கூடாது. மூன்றுவதாக 56 பவுண்டு எடையுள்ள இருபது குண்டுகளைத் தலைக்கு மேலாகச் சுழற்றி வீசினுர். நான்காவதாக நூறு கெஜம் பின்னேக்கி வேகமாக ஓடினுர். ஐந்தாவதாக நூறு கெஜ தூரத்தைத் தவளையைப் போல் தத்தித் தத்திக் கடந்தார். ஆறுவது சாதனை 10 பவுண்டு எடையுள்ள சம்மட்டியை எண்பதடி தூரத்துக்குத் தூக்கி வீசினுர். ஏழாவது, நூற்றி நாற்பது அடி தொலைவில் உள்ள ஒரு முளையில் இரண்டு பவுண்டு எடையுள்ள இரும்பு வளையங்களைக் குறி பார்த்து வீசி, அவைகளை முளையில் பதிய வைத்தார். எட்டாவதும் கடைசியானதுமான சாதனை ஒரு கோச் வண்டியின் சக்கரத்தை அரை மைல் வரை கீழே சரியாமல் உருட்டிச் சென்றுர். இதில் அதிசயம் என்னவென்றுல் இத்தனை சாதனைகளையும் இருபத்தைந்தே நிமிஷங்களில் செய்திருக்கிறுர் வில்லியம். அசகாய சூரர் என்ற பட்டம் இவருக்குத்தான் பொருத்தம். இல்லையா?

○ ரோம் நகரில் ஆஸ்திரிய உதை பந்தாண்டக்காரர்களும் இத்தாலிய உதை பந்தாட்டக்காரர்களும் மைதானத்தில் மும்முரமாக விளையாடிக் கொண்டிருந்தனர். இந்தப் போட்டியை முஸோலினி பார்த்துக் கொண்டிருந்தார். பாதி நேரம் வரை ஆஸ்திரியப் பந்தாட்டக்காரர்களின் கையே ஓங்கிக்கொண்டு வந்தது. இதனுல் எரிச்சல் அடைந்த முஸோலினி தம் நாட்டுக் குழுவினரின் 'டிரஸ்ஸிங் ரூமு'க்கு ஒரு செய்தி அனுப்பினுர். ''போட்டியில் அவர்கள் தோல்வி அடைந்தால் அத்தனை பேரையும் அப்போதே ராணுவத்தில் சேர்த்துக் கொண்டு விடுவோம்'' என்று. பலன் போட்டியில் இத்தாலிய கோஷ்டி வென்றது. இந்த அதிசயம் நிகழ்ந்தது 1935ம் ஆண்டு.

○ குத்துச் சண்டை வீரர்களின் உடல் உறுதி எப்படிப் பட்டதென்று தெரியுமா உங்களுக்கு? கருங்கல் மாதிரி இருக்கும். அவர்கள் உடல் குத்துக்களை வாங்கி வாங்கி அப்படி மரத்துப் போயிருக்கும். அவர்களது கைகளோ? கேட்கவே வேண்டாம். ஒரு பிடி பிடித்தால் போதும். எள்ளிலிருந்து எண்ணெயாக வழியும். வில்லியம் தாம்ஸன் பெண்டிகோ என்பவர் பிரபல குத்துச் சண்டை வீரர். 1839ம் ஆண்டின் இங்கிலாந்தின் பாக்ஸிங் சாம்பியனுக விளங்கியவர். உடற்கட்டு மிக்கவர். ஆனுலும்கூட இவர் பறக்கும் ஈயைத் தமது ஆள் காட்டி விரல் கட்டை விரல் களுக்கிடையே லாகவமாக ஈக்கு எவ்வித இம்சையுமின்றிப் பிடிப்பாராம். அப்படியானுல் அந்த இரும்புக் கரங்களில் உறுதியோடு எத்தனை நளினமும் கலந்திருக்க வேண்டும்? முறுக்கேறிய உடலானுலும் பறக்கும் ஈயைப் பிடிக்குமளவுக்கு வளைந்து தொய்யக்கூடியது சாகஸமில்லையா?




பலே பாலு!
கற்பனை: வாண்டு
சித்திரம்: செல்லம்
ஏய், பாலு! இதோ பார் என்னுடைய புதிய டெலஸ்கோப். இது வழியாகப் பார்த்தா எப்படித் தெரியுமா இருக்கும்?
எங்கே, கொண்டா பார்க்கலாம்.
என்னடாது, ஒண்ணுமே தெரியல்லே..?
இப்போ இந்தக் கண்ணாடியிலே பாரு; அற்புதமான ஒரு காட்சி தெரியும்! ஹ... ஹ... ஹா!
டேய், சீனு! அயோக்கியப் பயலே...
ஆத்திரப் படாதே பாலு; தந்திரக்காரர்கள் கழகம்னு ஓர் அமைப்பு. அதிலே நான் மெம்பர். இதோ பார் இதுதான் அதற்கான 'பாட்ஜ்'...
பாட்ஜ் எப்படி? டெலஸ்கோப் பார்த்த கண்களைக் கழுவுவதற்காக நாங்கள் இதை இப்படிப் பயன்படுத்துவோம்! ஹ... ஹ... ஹா...!
பிறகு பாலு தன் வீட்டில்
பார்க்கத் தத்ரூபமாக இருக்கு. அந்தப் பயல் சீனுவை முட்டாளாக்க இது போதும்.
சீனுப் பயலே, இந்தப் பூவை நீ முகர்ந்து பார்க்கும்போது உன் மூஞ்சியிலே... ஐயையோ, ஐயையோ...! நான் இப்போ சொல்ல மாட்டேன்!
கம் ஆன் சீனு! இதோ பாத்தியா? அற்புதமான குள்ள வெஹரட்டி சூரிய காந்தி. எங்கப்பா நேத்து வாங்கிவந்தார்.
என்ன அழகா இருக்கு? ரொம்பப் பிரமாதம்!
சீக்கிரம் மூக்கைக் கிட்டக் கொண்டு போடா, முட்டாள்! பசையோ அழுத்த என் கை துடிக்குது.


ஹ...ஹ...ஹா! இதைப் பார்த்த உடனேயே உன் தந்திரம் எனக்குப் புரிஞ்சு போச்சு அப்பனே! பலூனே நல்லா அமுக்கு...
அந்தப் பயலைப் பழிவாங்காமல் விடறதில்லே.
அதோ வரான் சீனுப் பயல்.
புதுக் காசு...ம்... பாலுவோட வேலைத்தனமோ?
உன் தந்திரம் எங்கிட்டே பலிக்காதப்பா! பாலுப்பா! அந்தக் காசு தரையோட தரையாப் பதிஞ்சிருக்கு, எடுக்க வராதுன்னு எனக்குத் தெரியும்.
அது சரி, ஆனா இதோ இதைப் பத்தி உனக்குத் தெரியாது இல்லியா?
ஆ...ங்..!
இப்படி இங்கே ஓர் ஆணியை உன்னை செலுத்தி விட்டேன்னா, என் விருப்பப்படி உன்னைக் கவனிக்க முடியும்...
உதவி... உதவி...! என்னை விடுவிக்க வாருங்கள்.
உன்னை இது நன்றாகக் குளிரப் பண்ணும்னு நினைக்கிறேன். எங்கள் தண்டனைக் கழகத்தில் இப்படித்தான் பழிதீர்த்துக் கொள்ளுவோம்.
டேய், டேய், பாலு. ப்ளீஸ் நிறுத்துடா! ப்ராமிசாச் சொல்றேன், இனிமே நான் உன் வழிக்கே வர மாட்டேன். ப்ளீஸ்... விடாப் பாலு!

தெரியுமா ?

159 செஸ் விளையாட்டு தோன்றிய நாடு எது?
160 பாக்தாத் நகரம் எந்த நாட்டில் உள்ளது ?
161 'ICI' — இந்த வார்த்தைகள் குறிக்கும் நிறுவனம் எது?
162 லண்டனின் 'நேஷனல் காலரி' எங்கு உள்ளது?
163 ஸெயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் இன்றைய பெயர் என்ன தெரியுமா?
164 ஐஸ்லாந்து முதன்முதலில் கண்டுபிடிக்கப் பட்டது எப்போது ?
165 உலகில் மிக உயரமான, அவியாத எரிமலை எங்கிருக்கிறது?
166 ஜப்பானிய சாம்ராஜ்யமான உதயசூரிய வமிசத்தைத் தோற்றுவித்தவர் யார் ?
167 முத்துத் துறைமுகமான பேர்ள் ஹார்பரை ஜப்பானியர் தாக்கியது எந்த ஆண்டு?
168 கூர்க்காக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் ?
169 உலகை முதலில் கடல் மூலம் சுற்றியவர் யார் ?
170 பிரபல ஸெயின்ட் பால்ஸ் கதீட்ரலைக் கட்டியவர் யார்?
171 எந்தக் கண்டத்தில், எந்தக் கடற்கரையில் உருகுவே உள்ளது?
172 ஐஸனேவருக்கு முந்தைய அமெரிக்க ஜனாதிபதி யார் ?
173 கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரு தனி நபர் மிக அதிகமான ஸ்கோர்கள் எடுத்ததற்காகப் புகழ் பெற்றார். அவர் யார்?
174 யுகோஸ்லாவியாவின் தலைநகர் எது ?
175 லூயி பாஸ்சர் தாம் கண்டுபிடித்த ஒரு ரசாயன முறைக்குத் தமது பெயரையே வைத்தார். அது என்ன ?
176 வெல்லிங்டன் கோமகன் எந்த நகரத்தில் பிறந்தார் ?
177 பிரான்ஸின் தேசிய மலர் எது ?
178 பகலில் மலரும் மலர் இரவில் குவிந்துவிடும்; இரவில் மலரும் பூக்கள் பகலில் வாடிவிடும். ஆனால் ஒரு மலர் இரவு பகல் இரு நேரமும் மலர்ந்தே இருக்கும். அந்தப் பூவின் பெயர் என்ன ?
179 உலகிலேயே மிக உயரமாக வளரும் மரம் எது ?
180 தென் கடற் தீவுகள் எந்த சமுத்திரத்தில் உள்ளன?
181 கானரித் தீவுகளுக்கு இன்னொரு பெயர் உண்டு. அது என்ன ?
182 நெப்போலியன் எந்தத் தீவிற்கு நாடு கடத்தப் பட்டுச் சிறை வைக்கப்பட்டார்?
183 புனிதத் தீவு (Isle of Saints) எந்தக் கடற்கரையில் உள்ளது ?

விடைகள் : 159. பாரதத்தில் தான். ஆனால் ஆங்கிலேயர் சீனு என்பார்கள். 160. ஈராக்கில். 161. இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ். 162. ட்ராபால்கர் சதுக்கத்தில். 163. லெனின் கிராட். 164. கி. மு. 300ல். 165. ஆண்டஸ் மலைத் தொடரில் உள்ள கோடோபாக்ஸி (Cotopaxi) 19,600 அடிகள். 166. ஜிம்மு. 167. 1941. 168. நேபாளத்தை. 169. மெக்கல்லன். 170. சர் கிறிஸ்டபர் ரென். 171. தென் அமெரிக்காவின் தென் கிழக்குக் கடற்கரையில். 172. ட்ரூமன். 173. ஸர் டோனால்டு பிராட்மன். 174. பெல்கிரேடு. 175. பாஸ்சரி சேஷன். 176. டப்ளினில். 177. லில்லி. 178. நூனி லைக்கின். 179. யூகலிப்டஸ். 180. பசிபிக் கடலில். 181. அதிர்ஷ்டத் தீவு (Fortunate Island) 182. செயின்ட் ஹெலனனிலும் செயின்ட் எல்பாவிலும். 183. இங்கிலாந்தின் மேற்குப் பகுதியிலுள்ள வேல்ஸ் மாகாணத்தின் வெல்ஷ் கடற்கரையில். இத் தீவில் 40,000 சன்யாசிகள் புதைக்கப்பட்டுள்ளனர். ★

தெரியுமே !





அழுத பிள்ளை
சிரிக்குமாம்...

அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்

அஜீரணம், வாயு, தூக்கமின்மை, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற குழந்தையின் உடல் கோளாறுகளை விரைவில் குணப்படுத்துகிறது.
பசியைத் தூண்டி, ஜீரணசக்தியைச் சீராக்கி, குழந்தையை ஆரோக்கியத்துடன் கொழுகொழுவென்று வளரச் செய்கிறது.



அமிர்தாஞ்சன்
லிமிடெட்

FDSAG1659TM


இச்சிறுமி வளர்வதற்கு
நீண்டகாலமாகும்போல்
தோற்றுகிறது

ஆனால் காலம் காற்றாய்ப் பறக்கிறது

இன்றே ஒரு ஸேவிங்ஸ் பாங்க் கணக்குத் தொடங்குங்கள்

அலகாபாத் பாங்கிற்கு வந்து எங்களில் யாரிடமாவது கேளுங்கள் ரூ. 5 மட்டும் செலுத்தி, உடனே ஒரு சேமிப்புக் கணக்குத் தொடங்கி விடலாம். அவ்வளவு சுலபம். நீங்கள் ஒழுங்காகச் சேமித்து வரும் சிறு தொகை எவ்வளவு சீக்கிரமாகப் பெருகி வருகிறது என்று ஆச்சரியப்படுவீர்கள். இன்னும் சௌகரியங்கள், சேவைகள் ......

- செக்கிங் டிபாஸிட்டுகள்
- கரண்ட் அக்கௌண்ட்
- பிரயாணிகள் செக்குகள்
- பிக்ஸட் டிபாஸிட்டுகள்
- ஸேப் டிபாஸிட் லாக்கர்கள்
- விவசாயத்திற்கான பணவசதி
- சிறு தொழில்களுக்கு கடனுதவி
- உத்தியோகஸ்தர்களுக்குக் கடனுதவி




அலஹாபாத் பாங்க்
ஹெட் ஆபீஸ்: 14, இந்தியா எக்ஸ்சேஞ்ச் பிளேஸ்,
கல்கத்தா-1

நீங்கள் தாராளமாகப் பழகுவதற்குரிய தென்று உணர்த்துகிறது

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள் சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி'-அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக, ஆர். அனந்தநாராயணனால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: சதாசிவம்

வாழ்வே ஆவலின் நிறைவேற்றம்



'க்ளிக்' அடித்துவைப்பீர்...நிரந்தரம்

எப்போதுமே உங்கள் கையோடிருக்கட்டும் தப்பாத் துணையான க்ளிக் III. மறைந்தோடும் வாழ்வின் மணியான கணங்களை நிரந்தரமாக்கிக் காப்பீர்—நினைவுமுகம் கண்முன் நிற்பதற்கே.

'இலக்கு வைத்ததும் சடக்' என எடுக்கவே ஆக்பா க்ளிக். காரியத் தகுதி வாய்ந்தது. உண்மை தவறாதது. கையாள எளிது. சிக்கனமிக்கது.

- 120 பிலிம் ரோல் ஒவ்வொன்றுக்கும் பெரிது பெரிதாக (6 x 6 செமீ.) படங்களைப் பெறுவீர்கள்.
- சிறப்பானதோர் தயார்த் தோலுறை, போர்ட்ரெய்ட் லென்ஸ், ஃப்ளாஷ்கன் ஆகியவை மேற்கொண்டு தனிவிலைக்குக் கிடைக்கும்.


தெள்ளத் தெளிவான பிரிண்டுகளுக்கும், என்லார்ஜ்மெண்டுகளுக்கும் கண்டிப்புடன் கோருவீர் ஆக்பா-கேவார்ட் போட்டோத் தாள்களை.

அனுமதிபெற்ற எல்லா ஆக்பா-கேவார்ட் விற்பனையாளர்களிடமும் கிடைக்கும்.

ஆக்பா-கேவார்ட் AG லீவர்குஸன் அவர்களின் கூட்டுறவோடு இவற்றைத் தயாரிப்போர்: தி நியூ இந்தியா இண்டஸ்ட்ரீஸ் லிட்.

விலை
ரூ. 56.25
(எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டது. இதர வரிகள் தனி).

SIMOES-AG-10-TAM



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
ஆக்பா-கேவார்ட் இந்தியா லிமிடெட்
பம்பாய் • நியூ டெல்லி • கல்கத்தா • சென்னை.
® புகைப்பட சாதனங்களின் தயாரிப்பாளர்களான ஆக்பா-கேவார்ட், ஆன்ட்வெர்ப்/லீவர்குஸன் ஆகியோரின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்.

ஆக்பா க்ளிக்—
இந்தியாவின் உன்னதப் புகழ்பெற்ற காமிரா.

நீங்கள் விற்பது எதுவானாலும் சரி, பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் அதை மேலும் நன்கு விற்பனை செய்ய உதவுகிறது.



பிலிப்ஸ் அதிக பட்சமான வாடிக்கையாளர்களின் கவனத்தை உங்கள் கடையின் பக்கம் திருப்புகிறது.



உங்கள் ஜெனரல் ஸ்டோரில் பொருள்களை அதிகக் கவர்ச்சியுடன் காட்சியில் வைக்க உதவுகிறது.



உங்கள் ரெஸ்டாரெண்டில் உள்ள சூழ் நிலையைப் பிரகாசமாக்க உதவுகிறது.

பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் 100 வாட் பல்பினைப் போல் இருமடங்கு ஒளி தருகிறது. இந்த ஒளி சிறந்ததும், பிரகாசமானதும், கூசாததுமானது, கண்களுக்குக் குளிர்ச்சி தருகிறது. இருந்தும், மின்சாரச் செலவு ஒரு 40 வாட் பல்புக்காகும் அளவேதான்.

இந்தக்கச்சிதமான பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் இணைப்பு ஒரு பிலிப்ஸ் 40 வாட் ஃப்ளுரோஸென்ட் பல்ப் கொண்டது. அது சிறந்த, அதிகப்பிரகாசமான ஒளியைத் தருகிறது. பிரபலமான பிலிப்ஸ் பாலியெஸ்டர் பலாஸ்ட், ஸ்டார்ட்டர், ஸ்டார்ட்டர் ஹோல்டர் மற்றும் ஸ்ப்ரிங் இணைந்த ரோடார் லாம்ப் ஹோல்டர் இவைகளைக் கொண்டது பிலிப்ஸ் ஸ்ட்ரிப் லைட். பொருத்துவதற்கு எளிதானது. உபயோகத்திற்கு சிக்கனமானது. மேலும் சிறந்த முறையில் விற்பனை செய்ய உதவுகிறது.

இன்றே பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட் பொருத்துங்கள்—உங்கள் வீடு, கடை மற்றும் தொழிற்சாலையில்.



பிலிப்ஸ் ஸ்ட்ரிப்லைட்

மூலம் அரைப்பங்கு செலவில் இருபங்கு வெளிச்சம் பெறுங்கள்.

பிலிப்ஸ்

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்

PHL-3539A